பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 108

வெள்ளிக்கிழமை
14 மார்ச் 2025

மாசி 30 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

**பெண்களுக்கு எதிராக அடக்குமுறை வேண்டாம்!**
» 06

பட்டலந்த விவகாரம்போன்று

## தமிழர் மீதான படுகொலைகளுக்கும் நடவடிக்கை எடுக்குமா அரசாங்கம்?

### தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் கேள்வி



யாழ்ப்பாணம், மார்ச் 14
பட்டலந்த விவகாரம்போன்று எத்தனை ஆயிரமாயிரம் படுகொலைச்சம்பவங்கள் எமது மண்ணிலே நடந்திருக்கின்றன. இந்தச் சம்பவங்கள் அரசாங்கத்தின் கண்களில் தெரியவில்லையா? அவற்றுக்கு எதிராக என்ன நடவடிக்கையை நீங்கள் எடுக்கப்போகின்றீர்கள்? என்று தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் கேள்வி எழுப்பியுள்ளார். 15

## முன்னணியின் கூட்டணி அமைவது உறுதியானது!

யாழ்ப்பாணம், மார்ச் 14
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் இன்னும் சில தரப்புகளும் புதிய தேர்தல் கூட்டணியை அமைப்பதற்குத் தீர்மானித்துள்ளன.
நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் 15

## இலங்கைக்கு இந்தியா உடனடி மருத்துவ உதவி!

புதுடெல்லி, மார்ச் 14
இலங்கை அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட அவசர கோரிக்கையை ஏற்று இந்திய அரசாங்கத்தால் மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.
இதன்படி நாட்டில் மிக நீண்டகாலமாக நிலவிவரும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில், இந்திய அரசாங்கம் 50 ஆயிரம் 16

## மாகாணசபை முறைமையை உதாசீனப்படுத்துகிறது அரசு!

சீ.வி.கே குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 14
மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களாக ஆளுநர்களை இந்த அரசாங்கம் எந்தவொரு மாவட்டத்திலும் நியமிக்கவில்லை. 16



## கச்சதீவு அந்தோனியாருக்கு இன்று கொடியேற்றம்!

யாழ்ப்பாணம், மார்ச் 14
கச்சதீவு அந்தோனியார் பெருவிழா இன்று மாலை 4 மணியளவில் கொடியேற்றத்துடன் 15



'உப்பிடி பட்டலையாலதான் இன்டைக்கு அரிசிய இறக்குமதி செய்ய வேண்டியநிலை கண்டியளே!'

வனவள, வன உயிரிகள்

## திணைக்களங்களின் ஆக்கிரமிப்பே நெல் உற்பத்திக்குப் பெரும் தடை!

சாடுகிறார் குகதாசன் எம்.பி.

கொழும்பு, மார்ச் 14
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நெல் உற்பத்தியை அதிகரிப்பதற்கு வனவளத் திணைக்களத்தினரும், வன உயிரிகள் திணைக்களத்தி 11

## பதவி துறக்கவேண்டும் தேசிய மக்கள் சக்தி!

கொழும்பு, மார்ச் 14
ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான அரசாங்கம் பதவி துறக்க வேண்டும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி 16

இந்திய அரசின் கட்டுப்பாடுகளால்

## கச்சதீவு வரும் இந்தியர்களின் எண்ணிக்கை குறைகின்றது!

இந்திய அரசாங்கத்தின் கட்டுப்பாடுகள் மற்றும் நெருக்குவாரங்களால்தான் கச்சதீவுக்கு வரும் இந்திய பக்தர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது 16

## பயங்கரவாதத் தடைச்சட்டம்; புதிய சட்டமூலம் விரைவில்!

கொழும்பு, மார்ச் 14
பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பில் பரிந்துரைகளை முன்வைப்பதற்கு நீதியமைச்சின் செயலாளர் தலைமையில் துறைசார் 15

யாழ்ப்பாணத்தில்

## தேசிய மக்கள் சக்தியே எல்லாச் சபைகளிலும் வாகை!

அமைச்சர் சந்திரசேகர் நம்பிக்கை
» 02

## இராணுவத்தின் பிடியிலுள்ள வீதிகள் விரைவில் விடுவிப்பு

பிரதி அமைச்சர் கொடிதுவக்கு தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 14
கடந்தகாலங்களில் பாதுகாப்புக் காரணங்களுக்காக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மூடப்பட்ட பல வீதிகளைத் திறக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். 15

பூஸா சிறைச்சாலையின்

## முன்னாள் அதிகாரி சுட்டுக் கொலை!

கொழும்பு, மார்ச் 14
பூஸா சிறைச்சாலையின் முன்னாள் சிறைச்சாலை அதிகாரியொருவர் காலி, அக்மீமனப் பகுதியில் வைத்து நேற்று மாலை சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். 15



## திஸ்ஸ விகாரைக்கு எதிராக பொதுமக்கள் நேற்றும் போர்!

பொலிஸாரின் தலையீட்டால் பதற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 14
பொதுமக்களின் காணிகளை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள தையிட்டி திஸ்ஸ 15

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி: 13.03.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 4016
ஆங்கில எழுத்து: G
வெற்றி இலக்கங்கள்: 12 57 61 62
விசேட எழுத்து: G

**ஹந்தஹண ராசி சுப பலன்**
திகதி: 13.03.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 1083
வெற்றி இலக்கினம்: சிம்மம்
வெற்றி இலக்கங்கள்: 08 20 60 62

**NLB ஜய**
திகதி: 13.03.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 042
ஆங்கில எழுத்து: Z
வெற்றி இலக்கங்கள்: 5 2 7 7

**மெகா பவர்**
திகதி: 13.03.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 2122
ஆங்கில எழுத்து: Z
சுப்பர் இலக்கம்: 13
வெற்றி இலக்கங்கள்: 11 20 21 66

**மஹஜன சம்பத**
திகதி: 13.03.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 5774
ஆங்கில எழுத்து: D
வெற்றி இலக்கங்கள்: 9 9 9 3 0 8

**தன நிதானய**
திகதி: 13.03.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 1804
ஆங்கில எழுத்து: J
வெற்றி இலக்கங்கள்: 03 09 19 26
விசேட எழுத்து: J

**அத சம்பத**
திகதி: 13.03.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 0349
ஆங்கில எழுத்து: O
வெற்றி இலக்கங்கள்: 9 3 0 8

# உள்ளூராட்சிசபைத் தேர்தலில் சைக்கிள் சின்னத்தில் கூட்டணி!

## பேச்சுகள் நடைபெறுகின்றன என கஜேந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 14

**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எதிர்வரும் உள்ளூராட்சிசபைத் தேர்தலைக் கூட்டணியாக எதிர்கொள்வதற்கான பேச்சுகள் நடைபெற்று வருகின்றன. புதிய கூட்டணி ஒன்று அமைக்கப்பட்டாலும் சைக்கிள் சின்னத்திலேயே வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தேர்தலில் களமிறங்குவோம்.**

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை யாழ்ப்பாணம் தேர்தல் திணைக்களத்தில் செலுத்திய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சைக்கிள் சின்னத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள 17 உள்ளூராட்சிசபைகளிலும் போட்டியிடுவதற்காகக் கட்டுப்பணம் செலுத்தியுள்ளது. வடக்கு, கிழக்கு முழுவதும் வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படவுள்ளன. கூட்டணி தொடர்பாக எமது கட்சித் தலைவருடன் பலரும் பேச்சு நடத்திவருகின்றனர். நாம் எமது நிலைப்பாட்டைத் தெளிவாகக் கூறியிருக்கின்றோம். இந்தப் பேச்சுகளில் முன்னேற்றம் ஏற்படும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. முழுமையான இணக்கம் எட்டப்பட்ட பின்னர் கூட்டணி விவரங்களை வெளியிட முடியும் -என்றார். (எ-125)

**சுபிரி தன சம்பத**
திகதி: 13.03.2025 தினம்: வியாழக்கிழமை
வெற்றி வாரம்: 0482
ஆங்கில எழுத்து: N
வெற்றி இலக்கம்: 2 1 0 2 0 2

**Super Ball**
திகதி: 13.03.2025 தினம்: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு வாரம்: 2748
ஆங்கில எழுத்து: J
வெற்றி இலக்கம்: 03 29 43 69

**சனிதா**
திகதி: 13.03.2025 தினம்: வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து: O
வெற்றி இலக்கம்: 09 19 62 63
வெற்றி வாரம்: 4909

**SASIRI**
திகதி: 13.03.2025 தினம்: வியாழக்கிழமை
வெற்றி வாரம்: 0641
வெற்றி இலக்கம்: 04 20 28

**லக்ன ராசி**
திகதி: 13.03.2025 தினம்: வியாழக்கிழமை
ரிஷபம்
வெற்றி இலக்கம்: 42 48 59 62
சீட்டிழுப்பு வாரம்: 4460

**KAPRUKA**
திகதி: 13.03.2025 தினம்: வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து: Q
சுப்பர் இலக்கம்: 33
வெற்றி இலக்கம்: 11 23 50 58
வெற்றி வாரம்: 1924

**அத கோடிபதி**
திகதி: 13.03.2025 தினம்: வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து: G
வெற்றி இலக்கம்: 19 33 36 50
வெற்றி வாரம்: 2574

# 'பார் பெர்மிட்' கருத்தே வாக்குவங்கிக்குச் சரிவு

## விக்னேஸ்வரன் வெளிப்படை

யாழ்ப்பாணம், மார்ச் 14

'பார் பெர்மிட்' தொடர்பில் கடந்த காலத்தில் நான் முன்வைத்த கருத்துகளே நாடாளுமன்றத் தேர்தலில் கட்சியின் வாக்குகள் குறைவதற்குச் செல்வாக்குச் செலுத்தின என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் தமிழ் மக்கள் விடுதலைக் கூட்டணியின் செயலாளருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். எமது கட்சியை கைநீட்டிப் பேச ஒரேயொரு விடயம் மாத்திரமே குற்றச்சாட்டாக முன்வைக்கப்பட்டது. 'பார் பெர்மிட்' பெற்றதே அதுவாகும். மதுபான அனுமதிப் பத்திரங்களைப் பெற்று கோடிக்கணக்கில் விற்பவர்களும் உள்ளார்கள். நான் பணநோக்கில் பெறவில்லை - என்றும் அவர் தெரிவித்தார். (ச-125)



# பாலச்சந்திரன் அணி இம்முறை மானுடன்!

யாழ்ப்பாணம், மார்ச் 14

இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இதுவரை அரசியலில் ஈடுபட்ட காரைநகர் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் க.பாலச்சந்திரன் தலைமையிலான அணி, இம்முறை உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் மக்கள் கூட்டணியில் இணைந்து போட்டியிடத் தீர்மானித்துள்ளது.

இதுதொடர்பில் காரைநகர் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் க.பாலச்சந்திரன் தெரிவித்துள்ளதாவது:

இதுவரை காலமும் எமக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்கள் காரைநகரின் அபிவிருத்திக்காக எம்முடன் கைகோர்ப்பார்கள் என்று நம்புகின்றோம். பிரதேசசபையில் இறுதி 7 மாதங்கள் தவிசாளராக இருந்து பல அபிவிருத்தித் திட்டங்களை இனங்கண்டு செயற்படுத்தியதை மக்கள் மறக்கமாட்டார்கள்.

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரான விக்னேஸ்வரனை நம்புவதுடன், அவரது கட்சியினரின் சட்டப் புலமையைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் காரைநகரின் நிலையான அபிவிருத்திக்கு திட்டங்களை வகுத்துச் செயற்படுத்த எண்ணியுள்ளோம் - என்றார். (எ-125)

# பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வது அவசியம்

## அலி சப்ரி வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 14

அநுராதபுரம் போதனா மருத்துவமனைச் சம்பவம் வீடுகளிலும், பொது இடங்களிலும், பணியிடங்களிலும் பெண்களின் பாதுகாப்பை உடனடியாக உறுதிப்படுத்தவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றது. செயற்றிறன்மிக்க பொறிமுறை ஒன்று உருவாக்கப்படவேண்டும் என்று முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் சமூக வலைத்தளப் பதிவொன்றில் தெரிவித்துள்ளதாவது

ஒருவர் மீது ஒருவர் குற்றஞ்சுமத்துவதற்குப் பதிலாக, பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குரிய அர்த்தமுள்ள நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டிய தருணம் இதுவாகும். பெண்களைப் பாதுகாப்பதற்கும், குற்றவாளிகளைப் பொறுப்புக்கூறச்செய்வதற்கும், பெண்கள் பாதுகாப்பாக உணரக்கூடிய சூழலைக் கட்டியெழுப்புவதற்கும் ஏதுவான செயற்திறன்மிக்க பொறிமுறையை உருவாக்கவேண்டும். நாம் பெண்கள் பாதுகாப்பை முன்னிறுத்தித் தொடர்ந்து போராடும் அதேவேளை, பாதிக்கப்பட்ட தரப்பினரின் தனியுரிமையைப் பேணுவதிலும் மிகுந்த அவதானத்துடன் செயற்படவேண்டும் என்று தெரிவித்துள்ளார். (எ-இ)

# அனைத்து சபைகளிலும் தே.ம.ச. ஆட்சியமைக்கும்

## கடற்றொழில் அமைச்சர் நம்பிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ்ப்பாணத்தில் உள்ள 17 உள்ளூராட்சிசபைகளிலும் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைக்கும் என்று கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலுக்காக யாழ்ப்பாணத்தில் உள்ள 17 உள்ளூராட்சிசபைகளுக்குமான அங்கீகரிக்கப்பட்ட முகவர்களை நியமிப்பதற்காக நேற்று யாழ்ப்பாணம் தேர்தல் அலுவலகத்துக்குச் சென்றபோது ஊடகங்களுக்கு அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், ஜெ.றஜீவன், ச.ஸ்ரீபவனந்தராஜா, தொகுதி அமைப்பாளர்கள், கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்ட சிலரும் அமைச்சருடன் வந்திருந்தனர். (எ-26,27,20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் மக்கள் கூட்டணி 16 சபைகளில் போட்டி!

யாழ்ப்பாணம், மார்ச் 14

**உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் மக்கள் கூட்டணி யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியில் உள்ள 17 சபைகளில் 16 சபைகளில் போட்டியிடத்தீர்மானித்துள்ளது. வல்வெட்டித்துறை நகரசபையில் மட்டும் சுயேச்சைக்குழுவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் கூட்டணி மான் சின்னத்தில் தனித்துப் போட்டியிடவுள்ளது. வல்வெட்டித்துறை நகரசபையில் மட்டும் சில காரணங்களுக்காக சுயேச்சைக் குழுவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தச் சபைக்கு அரசாங்க நிகழ்ச்சி நிரலில் தொழிற்சங்க ரீதியில் உறுப்பினர்களை நிறுத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதால் அதை முறியடிக்கும் வகையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சித் தேர்தலில் புதிய இளைஞர், யுவதிகளுக்கு சந்தர்ப்பத்தை வழங்கவுள்ளோம் - என்றார் . (எ-125)

# மருத்துவர் துஷ்பிரயோகம் மேலுமிருவர் கைது

அநுராதபுரம்,மார்ச் 14

அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் பெண் மருத்துவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் மேலும் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரின் 37 வயதுடைய சகோதரி மற்றும் 27 வயதுடைய ஆணொருவர் ஆகியோரே நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டனர்.

பிரதான சந்தேகநபர் தலைமறைவாக இருப்பதற்கு உதவிய காரணத்துக்காகப் பெண்ணும் சந்தேகநபரால் திருப்பட்டதாகக் கூறப்படும் கைபேசியை வைத்திருந்த குற்றச்சாட்டில் மற்ற நபரும் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)



# மன்னாரில் இளைஞர் குழு கட்டுப்பணம்

மன்னார்,மார்ச் 14

எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் சுயேச்சையாகப் போட்டியிட இளைஞர்குழு ஒன்று மன்னார் மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளது.

நானாட்டான் பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் ஜி.எம். சீலன் தலைமையிலான இளைஞர் குழுவினரே கட்டுப்பணத்தைச் செலுத்தினர்.

மன்னார் நகரசபை மற்றும் நானாட்டான் பிரதேசசபை ஆகிய இரு உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடுவதற்காக கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது. (ச-33-56)

# ஐஸ் போதை; ஒருவர் கைது

தருமபுரம் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சிறப்பு அதிரடிப்படையினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய ஏ - 35 பிரதான வீதியில் பயணித்த கப்ரக வாகனத்தை மறித்து சோதனையிட்டபோதே சந்தேகநபர் கைதானார்.

சந்தேகநபரிடமிருந்து 5 கிராம் 720 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது.

சந்தேகநபரை மேலதிக விசாரணையின்பின் நீதிமன்றில் முற்படுத்த தருமபுரம் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-113)



# யாழ்.பல்கலைக்கழகத்தில் 39ஆவது பொதுப்பட்டமளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ். பல்கலைக்கழகத்தின் 39 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் எதிர்வரும் 19, 20, 21, 22 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

குறித்த 4 நாள்களும் காலை 9 மணி, மு.ப 11.30 மணி, பி.ப. 2 மணி ஆகிய நேரங்களில் பட்டமளிப்பு நடைபெறும்.

4 ஆம் நாளில் மாலை 5 மணிக்கும் பட்டமளிப்பு நடைபெறும் என யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது. (ச- 25)

# பாலத்தின் கீழேயிருந்து இளைஞனின் சடலம்மீட்பு

அங்குணுகொலபெலஸ்ஸ அபேசேகரகம வீதியில், கீரிய கொடெல்ல சந்தியில் அதிவேக நெடுஞ்சாலைக்கு அருகிலுள்ள மேம்பாலத்தின் கீழ் இளைஞனின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உயிரிழந்தவர் அபேசிங்க விஜேநாயக்க சந்தீப லக்ஷான் (வயது-23) என அடையாளம் காணப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த இளைஞன் கொல்லை செய்யப்பட்டு பாலத்திலிருந்து வீசப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இளைஞனின் சடலத்துக்கு அருகில் மோட்டார் சைக்கிள் மற்றும் கையடக்கத் தொலைபேசி என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இதுதொடர்பில் மேலதிக விசாரணைகளை அங்குணுகொலபெலஸ்ஸ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)




இவ்வளவுநாளும் ஸ்கொலர்ஷிப் சோதினையில பாஸ் பண்ணின பிள்ளையளிட்டப் போய் 'எதிர்காலத்தில என்னவா வரப்போறீங்கள்?' எண்டு கேட்டால் உடன அந்தப் பிள்ளையள் டக்கெண்டு 'டொக்டரா வரப்போறன், இஞ்சினியரா வருவன், விஞ்ஞானி ஆவன்' எண்டுதான் சொல்லுவினம். ஆனால் இனிமேல் எல்லாப் பிள்ளையளும் 'நான் யூரியூப்பரா வரப்போறன்' எண்டுதான் சொல்லுவினம் போல கிடக்குது. அந்தளவுக்கு இப்ப கைநிறையக் காசு புழங்கிற தொழிலா அது மாறிட்டுது. பிள்ளையள் என்னவா வரப்போறமெண்டு சொல்லுற டொக்டர், இஞ்சினியர் எண்ட தொழில்கள்தான் இதுவரைக்கும், சனத்திட்ட மதிப்புக்கூடினதா இருந்தது. எப்பவுமே வருமானம் கூடின தொழில்களுக்குத்தானே மதிப்பும் இருக்கும். ஆனால் டொக்டர், இஞ்சினியர்மாரின்ர சம்பளத்தையே தூக்கிச் சாப்பிடுற அளவுக்கு யூரியூப்காரரின்ர வருமானம் உச்சத்தில நிண்டு குச்சுப்பிடி டான்ஸ் ஆடுது.

வீடொண்டுக்க அடாத்தா இரவுநேரத்தில பூந்து, படிக்கிற பிள்ளை மாட்டன் மாட்டன் எண்ட, உதவிகேட்டு வீடியோவில முகம் காட்டச் சொல்லி வெருட்டின யூரியூப்பர்ஸ் கும்பல் இப்ப விளக்கமறியலில இருக்கு. அவை மாட்டின பிறகுதான் அவையும், அவையை மாதிரி நாடுமுழுக்க இப்பிடி ஆக்களுக்கு உதவி செய்யிறம் எண்டு சொல்லி, வெளிநாட்டுக்காரரின்ர காசில சுகபோகமா இருந்த மற்ற யூரியூப்பர்மாரும் செய்த வண்டவாளங்கள் எல்லாம் வெளியில வரத்தொடங்கி இருக்குது. இப்பபிடிபட்ட யூரியூப்பருக்கு நிரந்தர வைப்பில மட்டும் 9 கோடி ரூபா இருக்கெண்டு ஒரு தகவல். அதின்ர வட்டியை வைச்சே காலம் முழுக்க காலாட்டிக் கொண்டே சாப்பிடலாம். வேலைவெட்டி ஒண்டுமில்லாத இந்த யூரியூப்பருக்கு 9கோடி நிரந்தரவைப்பில இருக்கெண்ட கதை உண்மையெண்டால், அவருக்கு எப்பிடி அந்தக் காசு வந்திருக்கும்? ஆக்களுக்கு உதவி செய்யிறன் எண்டு சொன்ன காசிலதான் அவர் இப்பிடி வெட்டி எடுத்து தன்ர கணக்கில போட்டிருக்கவேணும். அதவிட யூரியூப் கொம்பனியும் நிறையப்பேர் பாக்கிற வீடியோக்களுக்கு நிறையக் காசு குடுக்கும். எல்லாப் பக்கமும் இந்த யூரியூப் செய்யிறவைக்கு வரும்படிதான். ஆனால் இப்ப ஒராள் மாட்டுப்பட்டால இப்பிடித்தான் தாங்களும் மாட்டுப்பட வேண்டியிருக்கும் எண்டிட்டு கனபேர் 'இனி நாங்கள் இப்பிடி ஹெல்ப்பிங் வீடியோ போடமாட்டம்' என்று சொல்லிப்போட்டு எஸ்கேப் ஆகிட்டினம்.

இந்த யூரியூப்காரர் பிடிபட்டாலும்கூட, அவைக்கு சப்போர்ட்டா வெளிநாட்டுக்காரர் கொஞ்சப்பேர் நிக்கத்தான் செய்யினம். இந்தமுறை பிடிபட்ட பருத்தித்துறை யூரியூப்பருக்காகவும் வெளிநாட்டு அன்ரிமார் கடும் சப்போர்ட்டாம், அவைதான் அவருக்காக 10 லோயர்ஸை அண்டைக்கு பிடிச்சு விட்டவையாம். அதைவிட பேஸ்புக்கிலையும் 'அடுத்த தலைவரா வரவேண்டியவரை இப்பிடி பிடிச்சுப் போட்டினம்' எண்டு ஒப்பாரி வைக்கினம். அதைவிட பொலிஸ் பெரிய ஆக்களுக்கும் அங்க இருந்து கோல் எடுத்து 'இப்பிடி ஒரு நல்லவரை பிடிச்சு அடைச்சது நியாயமோ?' எண்டு ஆய்க்கினையாம். இப்பிடி அவை பல்குழல் தாக்குதல் நடத்திறது தனிய உந்த யூரியூப்பரில உள்ள அக்கறையால மட்டுமில்லை. அதுக்கு இன்னொரு காரணமும் இருக்காம். அது என்னெண்டு பட்சி நாளைக்குச் சொல்லும்.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிலும் பொறுமை அவசியம். செலவுகளை சமாளிக்கத் தேவையான பணம் இருப்பதால் பிரச்சினை எதுவும் இருக்காது. புதிய முயற்சிகளில் நன்றாக யோசித்து இறங்கவும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படக் கூடும். உணவு விஷயத்தில் கவனமாக இருக்கவும். உறவினர்கள் வருகையால் வீட்டில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம்.

**மிதுனம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். உடல்நலனில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் உற்சாகம் ஏற்படும்.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். ஆனால், புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். செலவுகள் ஏற்படும். ஆதாயம் உண்டாகும். மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். பணிச்சுமை அதிகரிக்கும்.

**சிம்மம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். குடும்பம் தொடர்பான முடிவுகள் எதுவும் எடுக்கவேண்டாம். சக ஊழியர்களை அனுசரித்துச் செல்லவும்.

**கன்னி:** எந்த முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். சிறு பிரச்சினை ஏற்படக்கூடும். பொறுமை அவசியம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**துலாம்:** உற்சாகமாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும். கையிருப்பு கரையும். உங்கள் பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும்.

**விருச்சிகம்** : தொடங்கும் காரியங்கள் வெற்றிகரமாக முடியும். உறவுகளால் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக்கூடும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் சக வியாபாரிகளால் சிறு சங்கடங்கள் ஏற்படலாம்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். பிள்ளைகளின் திடீர் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. அலுவலகத்தில் அதிகாரிகளின் ஆலோசனை பயன் தருவதாக இருக்கும்.

**மகரம்:** எதிலும் அவசரமில்லாமல் செயற்படவேண்டிய நாள். வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். செலவுகள் ஏற்படக்கூடும். கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும்.

**கும்பம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படக்கூடும். அன்றாடப் பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. வீண் விவாதங்கள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**மீனம்:** புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

# மாவைக்கந்தனுக்கு மஹா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், மார்ச் 14

வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவிலின் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.07 மணிமுதல் 10.09 மணி வரை உள்ள இடப லக்கின சுபமுகூர்த்தத்தில் இடம்பெறவுள்ளது.

மகா கும்பாபிஷேகப் பெருவிழாவை முன்னிட்டு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 4.32 மணி முதல் கர்மாரம்பம், கணபதி கோமம், பூர்வாங்கக் கிரியைகள், கோமாதிகள், சாந்திகள் நடைபெற்று இரவு 9.30 மணியளவில் கிரியைகள், கோ பூசை, திருமறை, திருமுறை பாராயனமும் இடம் பெறும்.

எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 8.10மணிமுதல் யாகாராம்பமும் 7, 8, 9 ஆகிய நாள்களில் அதிகாலை 4 மணி முதல் இரவு 11 மணிவரையும், 10ஆம் திகதி வியாழக்கிழமை அதிகாலை 4 மணிமுதல் மதியம் 2 மணிவரையும் எண்ணெய்க் காப்பும் தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிசேகமும் இடம்பெறவுள்ளன. இந்தக் காலப்பகுதியில் தினமும் அன்னபூரணி உமா மகேஸ்வர பூசையுடன் அன்னதானமும் இடம்பெறும் என்று ஆலய நிர்வாகத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-41-100)



# பெண்நிலைச் சந்திப்பும் பெண்ணிய உரையாடலும்

யாழ்ப்பாணம், மார்ச் 14

'ஊடறு' பெண்கள் அமைப்பின் 'பெண்நிலைச் சந்திப்பும் பெண்ணிய உரையாடலும்' நிகழ்வு நாளை 15 ஆம் மற்றும் 16 ஆம் திகதிகளில் யாழ்.தந்தை செல்வா கலையரங்கத்தில் காலை 10 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை இடம்பெறவுள்ளது.

முதல்நாள் நிகழ்வில் பெண்களும் திருநங்கைகளும் மட்டும் பங்குபற்றுவதுடன் இரண்டாம் நாள் நிகழ்வில் ஆண்களும் இணைந்து பங்குகொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# கச்சதீவுக்கான படகுசேவை விவரம்

யாழ்ப்பாணம், மார்ச் 14

நெடுந்தீவுத் துறைமுகத்திலிருந்து கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தலத்துக்கான விசேட படகுசேவை இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. காலை 09.30 மணிக்கு சமுத்திரதேவா படகும் காலை 10 மணிக்கு அமிர்தினி படகும் கச்சதீவு நோக்கி சேவையில் ஈடுபடும். ஒரு வழிப் பயணக் கட்டணமாக 1000 ரூபா அறவிடப்படும். இதேவேளை இன்று காலை 6 மணிமுதல் நண்பகல் வரையில் படகுசேவைகள் குறிகட்டுவான் துறைமுகத்திலிருந்தும் இடம்பெறும் என நெடுந்தீவு பிரதேச செயலகத்தினர் அறிவித்துள்ளனர். (ச-25,9)





கீரிமலை ஸ்ரீ நகுலாம்பிகா தேவி நகுலேஸ்வரர் ஆலய மாசிமகத் தீர்த்தோற்சவம் கீரிமலைக் கண்டகி தீர்த்தக் கடலில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பக்திபூர்வமாக இடம் பெற்றது. (ச-25,66)





# மூளாய் சைவப்பிரகாச வித்தி. கரம் போட்டியில் சம்பியன்

முல்லைத்தீவு, மார்ச் 14

வலிகாமம் கல்வி வலய மட்டத்தில் இடம்பெற்ற 17 வயது ஆண்கள் மற்றும் 17 வயது பெண்கள் பிரிவுகளில் நடைபெற்ற கரம் போட்டியில் மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் சம்பியனாகி மாகாணமட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது. (ச-555)

# தேங்காய் விலை சரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 14

சந்தையில் தேங்காயின் விலை சடுதியாகக் குறைவடைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் 200 முதல் 230 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டு வந்த தேங்காய் தற்போது 150 முதல் 180 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தேங்காய்சார் பொருள்கள் உற்பத்திசெய்யும் நிறுவனங் கள் தேங்காயின் கொள்வனவு விலையைக் குறைத்ததையடுத்து தாமும் விலையைக் குறைத்து விற்பனை செய்வதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக
தேசத்தின் வாவிகளை உயிரூட்டமளிக்கும் கடமையை நாம் நிறைவேற்றி வருகின்றோம்.

2001 உடமத்தல்ல வாவி
2002 இலுக்பெலஸ்ஸ வாவி, கொம்பெட்டியாரு வாவி
2014 தெமடல மகா வாவி
2017 ஹலவில்லகுளம் வாவி, அம்பகஹ வாவி
2018 கொரகஹகொள்ள வாவி, துான்பால வாவி
2020 நெலவகம வாவி, கித்தகல்ல வாவி
2021 புப்பிரிய வாவி, உஹுவ துடா வாவி, தொவெதுன வாவி
2022 தெனிகெதல வாவி, ரன்மலே வாவி, கொரகஹகொள்ள வாவி
2023 வேனதிவுள் வாவி, கிடாச்சூரி வாவி, குருபிடிய வாவி, கொஹொமுவல் வாவி, துல்லெவ வாவி
2024 பொம்பிடிய வாவி, துவெத்தேகம வாவி, மாக்கும்புர வாவி, சமலை வாவி

அபேமசம்பத்

# இனப்படுகொலைக்கான நீதி சர்வதேசமே தலையிடுக!

## அருட்தந்தை சக்திவேல் வலியுறுத்து!

**யாழ்ப்பாணம், மார்ச் 14**

**தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை, போர்க்குற்றங்கள் போன்ற விடயங்கள் என அனைத்துக்கும் சர்வதேசத்தின் தலையீடு வேண்டும். அதனை மறுப்பவர்கள் குற்றவாளிகளே என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா. சக்திவேல் தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முன்னாள் பிரதம மந்திரியும், ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்கவுடன் அல்ஜஸீரா ஊடகவியலாளர் நடத்திய நேர்காணலைத் தொடர்ந்து தெற்கில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக மக்களின் கொந்தளிப்பு எழுந்துள்ளது.

பட்டலந்த வதை முகாமை மையமாக வைத்து அதற்குக் காரணமான பிரதான சூத்திரதாரியான ரணிலின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளைப் பறிக்கவேண்டும் எனும் குரல் ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கையில், தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் இது தொடர்பில் விசாரணை நடத்தப்படும் எனக் கூறுவதில் எவ்வாறு நம்பிக்கை வைப்பது? ஒரு குற்றவாளி இன்னும் ஒரு குற்றவாளியை விசாரிக்க முடியுமா? அவ்வாறு விசாரித்தாலும் அது அரசியல் நோக்கம் கொண்டதாகவே இருக்கும். தெற்கில் ரணிலுக்கு எதிரான மனநிலை பட்டலந்தை வதை முகாமைப் பற்றியதாகவே மட்டும் உருவாகி இருப்பதும் இனவாதத் தன்மையை வெளிப்படுத்துகின்றது.

தற்போதைய தேசிய மக்கள் சக்தியான மக்கள் விடுதலை முன்னணியானது தமிழர்களுக்கு நிகழ்ந்த அநீதி தொடர்பில் வாய்திறக்காமல் அமைதி காத்துவிட்டுத் தற்போது ரணில் மீது விசாரணை எனக் கூறுவது அரசியல் நாடகமாக அமையக் கூடாது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-33,66)

## கிளிநொச்சி சந்தை விவகாரம் ஒத்திவைக்கப்படவேண்டும்!

### ஈ.பி.டி.பி. கோரிக்கை

கிளிநொச்சி, மார்ச் 14

கிளிநொச்சி பொதுச்சந்தையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கடைத்தொகுதி விவகாரம் தொடர்பில் கரைச்சிப் பிரதேசசபைக்கான மக்கள் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட்ட பின் ஆராயப்படவேண்டும் என்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஸ்ரீகாந் பன்னீர்செல்வம் வலியுறுத்தியுள்ளார்.

யாழ். ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பொதுச்சந்தை வளாகத்தில் உலக வங்கியின் நிதியுதவியில் அமைக்கப்பட்டுள்ள கடைகளை, சுற்று நிருபங்களுக்கமைவாக கோரல் அடிப்படையில் குத்தகைக்கு வழங்குவதற்கு கரைச்சிப் பிரதேசசபை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ள நிலையில் போராட்டம் முன்னெடுக் கப்பட்டுவருகின்றது.

இந்த விவகாரம் நியாயமான முறையில் தீர்க்கப்படவேண்டும். சுற்று நிரூபங்களையும் சந்தை வர்த்தகர்களின் எதிர்பார்ப்புகளையும் சமரசம் செய்து இந்த விவகாரத்தை தீர்ப்பதற்கு புதிய மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படும் வரையில் குறித்த விவகாரம் ஒத்திவைக்கப்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-41-20,27)

## ஈ.பி.எப். குளறுபடியில் 22,450 நிறுவனங்கள்

கொழும்பு,மார்ச் 14

ஊழியர்களுக்கான ஊழியர் சேமலாப நிதியை முறையாக வழங்காத 22 ஆயிரத்து 450 பொது மற்றும் தனியார் நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தொழிலாளர் அமைச்சு தெரிவித்துள்ளது. அதற்கமைய சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்களுடன் கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

சேவை வருங்கால வைப்பு நிதியிலிருந்து 30 சதவீத சலுகைகளைப் பெறும்போது சிலர் மோசடியான ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தூண்டப்பட்டுள்ளனர். கூடுதலாக, இடைத்தரகர்களின் தலையீடும் அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.



## மருத்துவர் துஷ்பிரயோகம் கொழும்பில் கவனவீர்ப்பு

கொழும்பு. மார்ச் 14

அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் மருத்துவர் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவத்துக்குக் கண்டனத்தை வெளிப்படுத்தி பெண் செயற்பாட்டாளர்கள் கொழும்பில் நேற்றுமுன்தினம் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தில் போராட்டத்தை மேற்கொண்ட பெண் செயற்பாட்டாளர்கள், பணியிடங்களில் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான சட்டங்கள் மற்றும் கொள்கைகளை உருவாக்கவேண்டும் என்றும், அதற்கு அவசியமான நிதியை ஒதுக்கவேண்டும் என்றும் அரசாங்கத்தை வலியுறுத்தினர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கடற்றொழில் சட்டத்துக்கு வடக்கு மீனவர்கள் கடும் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 14

**மீனவர்களின் கருத்துகளை உள்வாங்காத புதிய கடற்றொழில் சட்டத்தை ஏற்கமுடியாது. புதிய சட்டத்தில் என்ன இருக்கின்றது என்பது வடக்கு மாகாணத்தில் உள்ள கடற்றொழில் சங்கங்களுக்கு இதுவரை தெரியப்படுத்தப்படவில்லை. இவ்வாறு வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- ஐ.நா.வும், வெளிநாடுகளும், நாணய நிதியமும் இணைந்து புதிய கடற்றொழில் சட்டவரைவு ஒன்றைத் தயாரித்து அதை நடைமுறைப்படுத்த முயல்கின்றன. அதில் மீனவர்களுக்குத் துளியளவும் நம்பிக்கை இல்லை.

புதிய கடற்றொழில் சட்டம் தொடர்பாக கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளும், கடற்றொழில் அமைச்சரும் இணைந்து கொழும்பில் ஊடக சந்திப்பு ஒன்றை நடத்தியுள்ளனர். அந்தச் சட்டத்தில் என்ன இருக்கின்றது என்பது இதுவரை வடக்குக் கடற்றொழில் சங்கங்களுக்குத் தெரியப்படுத்தப்படவில்லை.

கடந்த ஜனவரி மாதம் கடற்றொழில் அமைச்சரைச் சந்தித்தபோது, இந்தச் சட்டம் தொடர்பாக எமக்குத் தெரியப்படுத்த வேண்டும் எனக் கோரியிருந்தோம். ஆனால் இன்றுவரை அது நடக்கவில்லை-என்றார். (எ-27)



## பெண்கள் நல்வாழ்வு உறுதிப்படுத்துங்கள்

யாழில் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 14

பெண்கள்மீதான பன்முகப்பட்ட அடக்குமுறைகளையும் வன்முறைகளையும் முடிவுறுத்தவேண்டும் என்று வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் வடக்கு - கிழக்குப் பெண்கள் கட்டமைப்பால் கவனவீர்ப்புப் போராட்டமொன்று சர்வதேசமகளிர்தினத்தையொட்டி முன்னெடுக்கப்பட்டது.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் பெண் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், சமூகப் பணியாளர்கள் மீதான அரச புலனாய்வாளர்களின் விசாரணைகள் அதிகரித்துவருகின்றன. அத்துடன் பாலியல் இலஞ்சங்கள், சுரண்டல்கள் அதிகரித்துள்ளன. பாலியல் துன்புறுத்தல்கள், வன்கொடுமைகளுக்கு பெண்கள் முகங்கொடுக்கநேரிடுகின்றது.

எனவே பெண்கள் சுதந்திரமாக நடமாட - நிம்மதியான வாழ்வை உருவாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் சுட்டிக்காட்டினர். (ச-33-20)

## பெண்மீதான சுரண்டல்கள் முடிவுக்குக் கொண்டுவருக

யாழில் பேரணி




யாழ்ப்பாணம்,மார்ச் 14

வல்லமை சமூக மாற்றத்துக்கான போராட்ட இயக்கத்தின் பௌர்ணமி நாள் செயற்பாட்டுத் தொடர்ச்சியில் 'பெண்களுக்கு எதிரான அனைத்துச் சுரண்டல்களையும் முடிவுக்கு கொண்டுவர மௌனத்தைக் கலைப்போம்' எனும் தொனிப்பொருளில் மக்கள் கவனவீர்ப்பு செயல்வாதம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.மத்திய பேருந்து நிலையம் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கவனவீர்ப்புப் போராட்டப் பேரணி தந்தை செல்வா கலையரங்கு வரை சென்று மகஜர் கையளிப்புடன் நிறைவடைந்தது. (ச-20)



## யாழ்ப்பாணத்தில் குளுக்கோமா நோய் விழிப்புணர்வு நடைபவனி!

யாழ்ப்பாணம், மார்ச் 14

உலக குளுக்கோமா வாரத்தை முன்னிட்டு லயன்ஸ் கழகம் மற்றும் எஸ்.ரி.எஸ் மருத்துவமனையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் மாபெரும் விழிப்புணர்வு நடைபவனி நேற்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் சிவன் கோவிலுக்கு முன்பாக ஆரம்பமான நடைபவனி காங்கேசன்துறை வீதியூடாகச் சென்று, பின்னர் மருத்துவமனை வீதியூடாகச் சென்று எஸ்.ரி.எஸ் மருத்துவமனையை அடைந்தது. பின்னர் மருத்துவமனையில் விழிப்புணர்வுச் செயலமர்வும் நடைபெற்றது. குளுக்கோமா நோய் என்பது கண்ணில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாகும். இந்த நோயை ஆரம்பத்தில் இனங்காண்டு சிகிச்சையைப் பெற்றுக்கொள்வதன் மூலம் நோயில் இருந்து குணமடையமுடியும். அந்தவகையில் இந்த நோய் தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக இந்த நடைபவனி முன்னெடுக்கப்பட்டது. (ச-33-27)

## வனவிலங்குகள் கணக்கெடுப்பு



கிளிநொச்சி,மார்ச் 14

விவசாயப் பயிர்களுக்குச் சேதத்தை ஏற்படுத்தும் வனவிலங்குகள் பற்றிய தேசிய கணக்கெடுப்பு விவசாய மற்றும் கால்நடைவளம் நிலம் நீர்ப்பாசன அமைச்சால் நாளை சனிக்கிழமை முன்னெடுக்கப்படவுள்ளது. அதற்கமைய கிளிநொச்சி மாவட்டத்தில் கிராம அலுவலர்கள் மூலம் பயிர் நிலங்கள், வழிபாட்டுத் தலங்கள், பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் கணக்கெடுப்பு நடவடிக்கைக்கான படிவங்கள் வழங்கப்பட்டுவருகின்றன. (ச-113)



## விசுவமடு பாரதி வித்திக்கு தொழில்நுட்ப ஆய்வுகூடம்

புதுக்குடியிருப்பு வலயக் கல்விப் பணிமனைக்குட்பட்ட விசுவமடு பாரதி வித்தியாலயத்தில் இடைநிலை தொழில்நுட்ப ஆய்வுகூடம் வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகத்தால் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாணவர்களின் கற்றல் நடவடிக்கைக்காகக் கையளிக்கப்பட்டது. இந்த ஆய்வுகூடக் கட்டடமானது விஞ்ஞான ஆய்வுகூடம், மாணவர்களின் நவீன கல்விச் செயற்பாட்டுக்காக கணினிமையம், நூலகம் அடங்கலாக திறந்துவைக்கப்பட்டுள்ளது. நிகழ்வில் கல்வி அமைச்சின் செயலாளர், முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர், புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர், அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-41-113)



நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியின் இல்லமெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிகள் கடந்தவாரம் சிறப்பாக நடைபெற்றன. (ச-25, 17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

வேகமாக ஓடுபவர்கள் தடுக்கி விழுவார்கள்.
அறிவோடு மெதுவாகச் செல்லவேண்டும்.


– ஷேக்ஸ்பியர் –

# படைவிட்டோடிகளைக் கட்டுப்படுத்துங்கள்!

அநுராதபுரம் மருத்துவமனையின் பெண் மருத்துவர் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம் ஒட்டுமொத்த இலங்கையையே உலுக்கியிருக்கின்றது. பெண்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அதற்கான பொறிமுறை ஒன்றைக் கட்டமைக்கவேண்டும் என்றும் குரல்கள் எழுந்திருக்கின்றன. நியாயமான இந்தக் கோரிக்கைகளை அரசாங்கம் கவனத்தில் எடுத்து, செயலாற்ற வேண்டியது அரசாங்கத்தின் கடமை. அதேநேரம் இந்த விடயத்தில் கவனிக்கத்தக்க இன்னொரு விடயமும் இருக்கின்றது. இந்தப் பாதகச்செயலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருப்பவர் ஒரு முன்னாள் சிப்பாய். இந்தச் சம்பவத்தில் மட்டுமல்ல நாட்டில் நடக்கும் மிகப்பெரும் குற்றச்செயல்களில் ஏதோ ஒரு வகையில் முன்னாள் சிப்பாய்களோ அல்லது படைத்தரப்பைச் சேர்ந்த ஒருவரோ தொடர்புபட்டிருப்பது இப்போது சகஜமான ஒன்றாகியுள்ளது. ஏதேனும் ஒரு குற்றச்செயல் நடந்தால் நிச்சயம் படைத்தரப்பைச் சேர்ந்த ஒருவர்தான் அதனுடன் தொடர்புபட்டிருப்பார் என்று சின்னக்குழந்தைகூடச் சொல்லுமளவுக்கு நிலைமை மோசமாகியிருக்கின்றது. நாட்டின் இராணுவக் நிர்வாகக் கட்டமைப்பில் உள்ள குறைபாடே இவ்வாறான குற்றச்செயல்களில் முன்னாள் சிப்பாய்களோ அல்லது படைத்தரப்பைச் சேர்ந்தவர்களோ தொடர்புபடுவதற்கு முதற்காரணம் என்பதை எவரும் மறுக்க முடியாது.

வடக்கு மாகாணத்தில் தலைவிரித்தாடும் போதைப்பொருள் முதற்கொண்டு, நாட்டின் பல பாகங்களிலும் நடந்தேறிவரும் துப்பாக்கிச் சூடுகள் வரையில் படைத்தரப்பைச் சேர்ந்தவர்களே அதிகம் தொடர்புபட்டிருக்கின்றனர் என்ற குற்றச்சாட்டு இன்று நேற்றல்ல, பல்லாண்டுகளாகவே இருக்கின்றது. இராணுவத்தில் இருந்து விலகியவர்களும், இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்களும், படைத்தரப்பைச் சேர்ந்தவர்களும் இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபட்டுப் பல சந்தர்ப்பங்களில் இனங்காணப்பட்டுக் கைதும் செய்யப்பட்டிருக்கின்றனர். தற்போது இராணுவத்தில் உள்ளவர்களும் ஒப்பந்த அடிப்படையில் கொலைச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளமையும், இராணுவத்தின் துப்பாக்கிகளைப் பயன்படுத்திப் பல கொலைச் சம்பவங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையும் அண்மையில் பகிரங்கத்துக்கு வந்து மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

படைத்தரப்புடன் தொடர்புபட்டவர்கள் - ஆயுதப் பயிற்சிபெற்றவர்கள் நாட்டின் குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டிருப்பது மிகவும் ஆபத்தானதொன்று. இந்த நிலைமை தொடர்ந்தால் நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பேணுவது மிகவும் கடினமாகவே இருக்கும். படைகளில் இருந்து தப்பியோடியோர் தொடர்பாகவும், விலகிச் சென்றவர்கள் தொடர்பாகவும், தற்போது இராணுவத்தில் இருப்பவர்கள் தொடர்பாகவும் இராணுவ நிர்வாகக் கட்டமைப்புச் சரியாகச் செயற்படாமையே இவ்வாறான குற்றச் செயல்களில் படைத்தரப்பைச் சேர்ந்தவர்கள் தொடர்புபடுவதற்கு மூலகாரணம் என்பதையும் மறுக்க முடியாது. ஆகையால் படைவிட்டோடிகளில் பெரும்பாலானவர்கள் பாதாள உலகக் குழுக்களுடனோ அல்லது ஒப்பந்தக் கொலைகாரர்களாகவோ, குற்றக் கும்பல்களுடன் இணைந்தோ செயற்படுகின்றனர் என்று கூறப்படும் நிலையில், அவ்வாறானவர்களை அடையாளம்கண்டு அவர்களைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் உடனடியாக முன்னெடுக்கப்படும் அவசியம். நாட்டில் குற்றச்செயல்கள் அதிகரிப்பதும், அவற்றில் பாதுகாப்புத் தரப்பைச் சேர்ந்தவர்கள் தொடர்புபட்டிருப்பது தொடர்ச்சியாக அவதானிக்கப்படுவதும் நிச்சயம் ஆபத்தான அறிகுறியே. அதைக் கட்டுப்படுத்துவது அரசாங்கத்தின் முன்னுள்ள முக்கியமான அதேநேரம் அவசரமான பணிகளில் ஒன்றாகும்.




# தேர்தல் சட்டத்தை மீறுகின்ற வேட்புமனு நிராகரிக்கப்படும்



## தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 14

**உள்ளூராட்சிமன்றத் தேர்தல் சட்டத்துக்கமைய தாக்கல் செய்யப்படாத வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படக் கூடிய வாய்ப்புகள் உள்ளன. அது தொடர்பில் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
வேட்புமனுக்களை இரத்துச் செய்வது எமது நோக்கமல்ல. தேர்தலில் போட்டியிட விரும்பும் அனைவருக்கும் அதற்கான வாய்ப்பளிக்கப்பட வேண்டுமெனில் வேட்புமனுக்கள் அதற்கேற்றவாறு தவறுகள் இன்றி சமர்ப்பிக்கப்படவேண்டும். அதேபோன்று 25 சதவீத பெண் பிரதிநிதித்துவம், 25 சதவீத இளைஞர் பிரதிநிதித்துவம் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. வேட்பாளர்களின் சொத்து மதிப்பு விவரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியது கட்டாயமாகும். இது தொடர்பில் விசேட அவதானம் செலுத்தவேண்டும் என்று அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம் - என்றார். (எ-இ)

# தினசரி ஐவர் சிறுநீரகநோயால் உயிரிழப்பு

கொழும்பு,மார்ச் 14
இலங்கையில் தினசரி சிறுநீரக நோயாளிகள் ஐவர் உயிரிழக்கின்றனர் என தேசிய சிறுநீரகநோய்த் தடுப்பு மற்றும் ஆய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.
2023ஆம் ஆண்டின் தரவுகளின்படி நாட்டில் நாள்ப்பட்ட சிறுநீரக நோய்க்குள்ளானவர்கள் 2 இலட்சத்து 13 ஆயிரத்து 448 பேர் காணப்பட்டனர். அதே ஆண்டில் 1,626 உயிரிழப்புகள் பதிவாகின என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# தேசபந்துவால் பணித்துஷ்பிரயோகம்

கொழும்பு,மார்ச் 14
தேசபந்து தென்னக்கோன் தனது அதிகாரத்தின் கீழ் உள்ள பொலிஸ் அதிகாரிகளைப் பயன்படுத்தி ஒரு குற்றவியல் வலையமைப்பை இயக்கியதாக சட்டமா அதிபர் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு தெரிவித்துள்ளார்.
தென்னக்கோனின் கைது நடவடிக்கையை நிறுத்தக்கோரிய மனுவை விசாரித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.
தென்னக்கோன் தனிப்பட்ட மோதல்களைத் தீர்க்கப் பொலிஸாரை துணை இராணுவப் படையாகப் பயன்படுத்தினாரெனவும் பீரிஸ் சுட்டிக்காட்டினார். (ச-இ)

# தேங்காய் திருடிய இளைஞன் மீது சூடு

குருநாகல் உஹுமீயப் பகுதியில் தென்னந்தோப்பில் தேங்காய் திருடச்சென்ற இளைஞன்மீது உரிமையாளர் ஒருவரால் துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தென்னந்தோப்பின் உரிமையாளர் 12 ரக போர்த் துப்பாக்கியுடன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)



# சிறுவர் வன்முறைகள் இவ்வருடத்தில் 1,401

கொழும்பு, மார்ச் 14
இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பில் ஆயிரத்து 401 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.
அதிகளவிலான முறைப்பாடுகள் சிறுவர்களின் தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் உரிமை மீறல்கள் தொடர்பானவையாகப் பதிவாகியுள்ளன என்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளை
சனிக்கிழமை -பங்குனி - 01
15.03.2025
சுபநேரம் : 03.21 - 04.51
ராகுகாலம் : 09.21 - 10.5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலநிலை மாற்றம்; மீண்டெழுவது எவ்வாறு?

## கிளிநொச்சியில் செயலமர்வு

**கிளிநொச்சி, மார்ச் 14**

**சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனம், கிறிஸலிஸ் நிறுவனம், வறுமை பகுப்பாய்வு நிலையம் ஆகியன இணைந்து கிளிநொச்சி மாவட்டத்தில் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளுக்கு எவ்வாறு முகம்கொடுப்பது? மற்றும் அதிலிருந்து மீண்டெழும் தன்மையைக் கட்டியெழுப்புதல் ஆகியவை தொடர்பிலான கலந்துரையாடல் கிளிநொச்சியில் அமைந்துள்ள தனியார் விடுதியில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்றது.**

கலந்துரையாடலில் பூநகரி மற்றும் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவுகளில் நடைமுறைப்படுத்திய சமூக செயற்பாட்டுத்திட்டங்கள் காட்சிப்படுத்தப்பட்டு அவை தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டன. எதிர்காலங்களில் அரச திணைக்களங்கள் இவற்றை முன்னெடுத்துச்செல்லும் வழிவகைகள் வடமாகாணத்தில் காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்தும் செயற்றிட்டங்களை வலுப்படுத்துதல் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன. வடக்கு மாகாணத்தில் காலநிலை மாற்றம், குடிநீர் மற்றும் உணவுப் பாதுகாப்புத் தரவுகள் என்பன அவற்றின் மாறுபாட்டு நிலைகள் தொடர்பில் விளக்கக்காட்சியும் நிகழ்த்தப்பட்டது. (ச-41-113)





# பெண் சாதனையாளர்கள் மன்னாரில் கௌரவிப்பு

மன்னார்,மார்ச் 14

மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் "நிலையான எதிர்காலத்தை உருவாக்குவதற்காக அவள் வலுவான வழிகாட்டியாக இருப்பாள்" எனும் தொனிப்பொருளிலான சர்வதேச மகளிர்தின நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட பெண் தொழில் முயற்சியாளர்கள் நினைவுச்சின்னம் மற்றும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் மன்னார் தோட்டவெளிக் கிராமத்தைச் சேர்ந்த மாணவி யேசுதாசன் யதுசிகா ஈட்டி எறிதல் போட்டியில் தேசிய ரீதியில் முதலிடத்தை தனதாக்கிமையையிட்டு அவருக்கு 'மன்னாரின் ஆற்றல் வீராங்கனை' எனும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (ச-33-56)

# மரக்கிளைகளை அகற்றக் கோரிக்கை

கிளிநொச்சி, மார்ச் 14

கிளிநொச்சி மத்திய கல்லூரி வளாகத்தில் ஆபத்திலுள்ள மரக்கிளைகளை மரக்கூட்டுத்தாபனம் வெட்டிய நிலையில் அவை அகற்றப்படாமல் ஒரு மாத காலம்வரை வளாகத்திலேயே காணப்படுகின்றன. அவற்றை உடனடியாக அகற்ற உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனப் பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-41-113)

கொக்குவில் மத்திமேற்கு கிராம அலுவலர் பிரிவில் கிராமமட்ட அலுவலர்களின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தினம் கடந்த சனிக்கிழமை கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானைப் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கலைவாணி அகிலன் பங்கேற்றார். (ச)



# மன்னாரில் சிறப்புற்ற இப்தார் நிகழ்வுகள்

மன்னார், மார்ச் 14

வடக்கு மாகாணக்கல்விப், பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகு ஏற்பாடுசெய்த வடக்கு மாகாண இப்தார் நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை மன்னார் எருக்கலம்பிட்டி மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது. சர்வமதத் தலைவர்களின் பங்குபற்றலுடன் இடம்பெற்ற நிகழ்வில் பிரதமவிருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ. இளங்கோவன் மற்றும் மன்னார் மாவட்டச் செயலாளர் க. கனகேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (ச-56,213)





# தெளிவூட்டல் செயலமர்வு

யாழ்ப்பாணம் , மார்ச் 14

இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் ஒழுங்கமைப்பில் யாழ்.மாவட்டச் செயலகமும் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையும் இணைந்து நடத்திய சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான தெளிவூட்டல் செயலமர்வு யாழ்.மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.சுரேந்திரநாதன் தலைமையில் யாழ்.மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. பிரதேச செயலகங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்வாங்கல் தொடர்பான விடயங்கள் ஊடாகத் தொழில் முயற்சியில் எவ்வாறு வெற்றியடையலாம்? என்பது தொடர்பாக குறித்த செயலமர்வில் தெளிவுபடுத்தப்பட்டது. (ச-22,66)



கைதடி சேதுகாவலர் வித்தியாலயத்தில் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (ச-41)



கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் 2024 ஆம் ஆண்டு நடத்திய ஆடை வடிவமைத்தல், அழகுக்கலை மனைப்பொருளியல் பாடநெறிகளுக்கான டிப்ளோமாப் பயிற்சியை நிறைவுசெய்த 21 மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. (ச-41-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்களுக்கான சமவுரிமை விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 14

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக் கிளை மற்றும் யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை ஆகியவற்றின் ஏற்பாட்டில், 'பெண்கள் உரிமைகளுக்கான விடயப்பரப்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய சட்டமாற்றம்' என்ற தொனிப்பொருளிலான கருத்துப்பகிர்வு யாழ். பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

"யாழ். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பால்நிலை சமத்துவம், அரசியல் பிரதிநிதித்துவம், சமூகம் சமவாய்ப்பு, பெண்களுக்கு விஷேட சட்டவாக்கம், குடும்ப வன்முறைச்சட்டம், · உள்ளூர் அதிகாரசபையில் பெண்களுக்கான சட்டம், அடிப்படைச் சட்ட அறிவு, பெண்களுக்கான விஷேட சட்டம், தொழில் உரிமை, மகப்பேற்றுக் காலச் சட்டம், அரசியல் அமைப்பு, தனிப்பட்ட பாதுகாப்பு, பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டன. (ச-25,20,27-125)



# ஆனையிறவு உப்பளத்தில் சர்வதேச மகளிர் தினம்!

கிளிநொச்சி, மார்ச் 14

கிளிநொச்சி மாவட்டச் செயலகமும் மாவட்ட மகளிர் விவகாரக் குழுக்களும் இணைந்து நடத்திய 'நிலையான எதிர்காலத்தை உருவாக்குவதற்கு வலுவான வழிகாட்டி' எனும் தொனிப்பொருளிலான சர்வதேச மகளிர்தின நிகழ்வு ஆனையிறவு உப்பளத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

கிளிநொச்சி மேலதிக மாவட்டச் செயலர் இ.நளாயினி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிரிவலம் பவுண்டேஷனால் இரண்டு பல்கலைக்கழக மாணவிகளுக்கு மடிக்கணினி மற்றும் கற்றல் உதவித்தொகை என்பன வழங்கிவைக்கப்பட்டன.

நிகழ்வில், கிளிநொச்சி மாவட்டப் பதில் செயலர் எஸ். முரளிதரன், ஆனையிறவு உப்பளத்தின் முகாமையாளர் வி.சுகந்தன் , கண்டாவளைப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் பி.சுரேகா, கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் உதயனி நவரத்தினம், அனுசரணையாளர்கள், மாவட்டச் செயலக மற்றும் பிரதேச செயலகங்களின் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஆனையிறவு தேசிய உப்பள உத்தியோகத்தர்கள் மற்றும் பெண் பணியாளர்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (ச-22,113)



# ஒன்றுகூடல் நிகழ்வு

சோலைக்குயில் அவைக்காற்றுக் கழகத்தின் ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த சனிக்கிழமை வடக்கு பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய கல்யாண மண்டபத்தில் இடம்பெற்றது. விருந்தினர்களின் மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து புலவர் ம. பார்வதிநாதசிவம் இயற்றிய தமிழ் வாழ்த்துப்பாடல் சோலைக்குயில் மாணவர்களால் இசைக்கப்பட்டது. நிகழ்வில் பிரதம விருந்தினரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான சோ. தேவராஜாவின் நூல் வெளியீட்டுரையைத் தொடர்ந்து கோகிலா மகேந்திரன் எழுதிய 'இணைகரத்தின் அயற்கோணங்கள்' சிறுகதை நூலை சோ. தேவராஜா வெளியிட்டுவைத்தார். தொடர்ந்து சர்வதேச பெண்கள் தினத்தையொட்டி 'விழிசைச் சிவம்' விருது வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. தொடர்ந்து சோலைக்குயில் மாணவர்களின் ஆற்றுகையில் கோகிலா மகேந்திரனின் எழுத்திலும், நெறியாள்கையிலும் உருவான 'ஒரு சோகம் இறுகும்போது' சிறுகதை நாடக நிகழ்வு இடம்பெற்றது. (ச-22,27)

# வாக்குரிமை சக்தியை கோட்டைவிடும் மக்கள்

மாற்றுக்கொள்கைகளுக்கான அமைப்பு சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 14

ஒரு நாட்டில் அரசையும் அரசியலையும் தீர்மானிக்கும் சக்தியாக மக்கள் இருக்கின்றனர். தமக்கான அந்த அதியுயர் சக்தியான வாக்குரிமையை சரியாகப் பயன்படுத்தி வெற்றிகொள்வது மிக அரிதாகக் காணப்படுகின்றது என்று மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் விக்ரர் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற தேர்தல் தொடர்பான கலந்துரையாடலின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலின் பிரதான பங்குதாரரான வாக்காளர்களுக்கும், தேர்தல் திணைக்களம், பொலிஸார், கண்காணிப்பு அதிகாரிகள் ஆகியோருக்கும் இடையிலான தகவல் பரிமாற்றம் என்பது ஒவ்வொரு தேர்தலிலும் தாக்கங்களைச் செலுத்திவருகின்றது. இதை ஒரு முறையான பொறிமுறைக்குள் கொண்டுவருவது அவசியமாகும்.

அதேவேளை வரவுள்ள தேர்தல்களில் சமூக ஊடகங்களின் தாக்கம் அதிகமானதாக உள்ளது. இந்தத் தாக்கம் தனிநபரையோ கட்சிகளையோ பாதிப்பதாக அமையுமானால் அதை எவ்வாறு எதிர்கொள்வது என்பதும் பலருக்கு கடினமானதொன்றாகவே இருக்கின்றது. அந்தவகையில் தேர்தலில் வாக்களிக்கும் மக்களின் வகிபாகம் அதிகரிப்பதை உறுதிசெய்வது அவசியமாகும்- என்றார். (ச-25, 27)

பழமைவாய்ந்த கீரிமலை ஸ்ரீ மகாமுத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை பல நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் வெகுசிறப்பாகவும், பக்திபூர்வமாகவும் இடம்பெற்றது. (ச-41-66)





# அமைச்சருடன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 14

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ்ஜுக்கும் அமைச்சின் கீழ் கடமையாற்றும் பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் கடமைகளை மக்களுக்கு மேலும் வினைத்திறனாக வழங்குதல் தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன், உத்தியோகத்தர்களின் தேவைப்பாடுகள் தொடர்பாகவும் அமைச்சர் கேட்டறிந்துகொண்டார். கலந்துரையாடலில் கடற்றொழில் நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சரும், யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர் கருணநாதன் இளங்குமரன், யாழ். மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ச-41-66)

# செயற்பட்டு மகிழ்வோம்

கொடிகாமம், மார்ச் 14

இடைக்குறிச்சி சர்வோதய முன்பள்ளி மழலைகளின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு முகாமைத்துவக் குழுத்தலைவர் க.சுதாகரன் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தின் அதிபர் தி.அபராஜிதன், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கொத்தணி பொதுமுகாமையாளர் க.அருட்செல்வன், இடைக்குறிச்சி கிராம அலுவலர் சோ.கீர்த்திகா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-41-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிதி அனுசரணையில் வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச அறநெறிப்பாட சாலை ஆசிரியர்களை இணைத்து தர்மாசிரியர் பரீட்சைக்கான கருத்தரங்கு நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. வேலணைப் பிரதேச செயலாளர் க.சிவகரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (ச-41-9)




# சக்கர நாற்காலி வழங்கிவைப்பு

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பத்ஜங்கீரா அறக்கட்டளையின் ஊடாக , வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சரவணபவன் என்பவரின் நினைவு நாளை முன்னிட்டு, கனடாவில் வசிக்கும் சசிதரன் குடும்பத்தின் நிதி உதவியில் முல்லைத்தீவு திருமுறிகண்டியைச் சேர்ந்த குணவாலன் நாகேஸ்வரியினால் கிளிநொச்சி பாரதிபுரத்தில் வசிக்கும் நடக்கமுடியாத இருவருக்கு, சக்கர நாற்காலிகள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கிவைக்கப்பட்டன. (ச-25-63)





வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் ஏழாலை உப பணிமனையின் ஏற்பாட்டில் பொதுமக்களுக்கான நடமாடும் சேவை கடந்த ஞாயிற்றுக்கிழமை ஈவினைக் கற்பக விநாயகர் ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது. (ச-66)



'ஆரோக்கியமான பெண்கள், வலிமையான சமூகம்' என்ற தொனிப்பொருளில் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு அசெட்லைன் பைனான்ஸ் லிமிடெட் நிறுவனமும்கிளிநொச்சிலயன்ஸ்கழகமும் இணைந்து நடத்திய மருத்துவ முகாம் உருத்திரபுரத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இந்த மருத்துவ முகாமில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு பயனடைந்தனர். (ச-22,113)



அண்மையில் யாழ்ப்பாணம் வருகைதந்த வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆசிரிய மாணவர்கள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு விஜயம்செய்து கலாசாலைச் சமூகத்தினருடன் சிநேகபூர்வ கலந்துரையாடலில் ஈடுபட்டனர். (ச-66)

கிளிநொச்சி தருமபுரம் மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கல்லூரியின் முதல்வர் திருமதி இந்திராகாந்தி தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்டப் பதில் செயலர் எஸ். முரளிதரன் உட்பட வலயக் கல்விப் பணிப்பாளர் , அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-25,113)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுராதபுரம் மருத்துவமனையில் பணிப்புறக்கணிப்பு கைவிடப்பட்டது

அநுராதபுரம், மார்ச் 14
அநுராதபுரம் மருத்துவமனையில் தொடர்ந்து மூன்றாவது நாளாகவும் இடம்பெற்று வந்த வேலைநிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது. மருத்துவமனையின் விசேட மருத்துவராக பயிற்சி பெற்று வந்த பெண் மருத்துவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய சம்பவத்துக்கு எதிர்ப்பை வெளியிட்டு பாதுகாப்பை உறுதிப்படுத்த வலியுறுத்தி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிலையில் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மருத்துவமனைக்கு வருகை தந்து மருத்துவமனையின் இயக்குநருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன் மருத்துவமனையைச் சுற்றி பலத்த பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதன் விளைவாக வேலை நிறுத்தம் கைவிடுவதாக மருத்துவமனை தரப்பால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25-சீ)

யா/அனலைதீவு வடலூர் அரசினர் தமிழ்க்கலவன் வித்தியாலயம்
பழைய மாணவர் சங்கம் மீள் உருவாக்கத்திற்கான
**பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும்**

யா/ அனலைதீவு வடலூர் அரசினர் தமிழ்க்கலவன் வித்தியாலய பழைய மாணவர் சங்கம் மீள் உருவாக்குவதன் பொருட்டு எதிர்வரும் (28.03.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற இருக்கும் மேற்படி பொதுக்கூட்டத்தில் பழைய மாணவர்கள் அனைவரும் தவறாது கலந்துகொண்டு தங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைக்குமாறு வேண்டுவதுடன் வினைத்திறனான நிர்வாகசபையைத் தெரிவுசெய்து அனைவரும் பாடசாலையின் வளர்ச்சியில் பங்குதாரர்களாகுமாறு அன்பாகக்கேட்டுக்கொள்கின்றேன்.

கதிர்காமத்தம்பி குகதீபன்
அதிபர்,
யா/ அனலைதீவு வடலூர் அ.த.க. வித்தியாலயம்.
அனலைதீவு. 2025.03.14

**மாபிள் வேலை**
உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 75 ரூபாய்
நிலம் இழுத்து பதிக்க - 100 ரூபாய்
077 334 1281

**THE ROYAL COLLEGE OF JAFFNA**
தனியார் கல்வி நிறுவனம் சங்கானை 3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில
By ந.விக்னேஸ்வரன் ஆச்சார்யார் பிரான் பற்று வீதி, சங்கானை, பிரதேச செயலகம் அருகில்
Tel - 077 675 1649
(CS/57731) J-1

**காணி விற்பனை**
காங்கேசன்துறை
K.K.S Road ஐ முகப்பாக
கொண்ட 2 பரப்புக் காணி.
மொத்த விலை
23 மில்லியன்
077 767 6169
(CR/44514) J-1

**ஓடுகள் விற்பனைக்கு**
ஊர்காவற்துறை புனித மரியாள் ஆலயத்தில் பாவித்த நல்ல நிலையிலுள்ள ஓடுகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
077 941 9643

**அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்**



கடந்த 13.02.2025 வியாழக்கிழமை சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்
**அமரர் சரவணமுத்து சின்னத்துரை**

அவர்களது இறுதிச்சடங்கில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி, மலர் வளையம், சமர்ப்பித்தவர்களுக்கும், மற்றும் தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.
மேலும் அன்னாரது அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய கிரியைகள் 15.03.2025 சனிக்கிழமை நண்பகல் 10.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தவர்களும் வருகை தந்து அன்னாரது ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்.
077 [illegible]
மீசாலை வடக்கு
கொடிகாமம்.
நன்றி
(CR 4456[illegible])



மீசாலை வடக்கு கட்டு வைரவர் ஆலய மாசி மக உற்சவம் நேற்று முன்தினம் புதன்கிழமை பக்தி பூர்வமாகவும், சிறப்பாகவும் இடம்பெற்றது. (ச-66)



# துவிச்சக்கரவண்டி பவுச்சர் கையளிக்கும் நிகழ்வு

மன்னார், மார்ச் 14
இந்தியா தமிழ்நாடு றோட்டரிக் கழகமும் இலங்கைறோட்டரிக்கழகமும் இணைந்து செயற்படுத்திவரும் 1000 துவிச்சக்கர வண்டி வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் 2 ஆம் கட்டநிகழ்வு, மன்னார் மாவட்டச் செயலகத்தின் மருதம் மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.
மன்னார் றோட்டரி கழகத்தின் தலைவர் திருமலை ராசா தனேஸ் தலைமையில் நடைபெற்றநிகழ்வில், விருந்தினர்களாக மன்னார் மாவட்டச் செயலர் க. கனகேஸ்வரன், தமிழ்நாடு ரோட்டரிக்கழக மாவட்ட ஆளுநர் சிவகுமார், அவரின் துணைவியார் பூங்கோதை , தமிழ்நாடு ரோட்டரிக் கழக மாவட்டச் செயலாளர் ஐயப்பராஜா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.
இதன்போது தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கும் தொழில் முயற்சியில் ஈடுபடும் மாற்றுத்திறனாளிகளுக்கும் துவிச்சக்கர வண்டியை பெற்றுக் கொள்ளும் பவுச்சர்கள் வழங்கி வைக்கப்பட்டன. (ச-25,213)



# வரவு ஒழுங்குக்கு பாராட்டு சான்றிதழ்

யாழ்ப்பாணம், மார்ச் 14
யாழ். மாவட்டச் செயலகத்தில் வரவில் சிறந்த உத்தியோகத்தர்கள் மற்றும் வரவை ஒழுங்காக கடைப்பிடிக்கும் கிளைகளுக் கான பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. யாழ். மாவட்ட பதில் செயலர் ம. பிரதீபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மாவட்டச் செயலக புதவிநிலை உத்தியோகத்தர்கள், கிளைத்தலைவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (ச-25,9-66)



# புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்கள் கௌரவிப்பு

கொடிகாமம், மார்ச் 14
வரணி - இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியால யத்தில் கடந்த ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபெறுகளைப்பெற்ற மாணவர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு வித்தியாலய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக லண்டன் கனகதுர்க்கா தேவஸ்தான அறங்காவலர் சபைத் தலைவர் மருத்துவர் வே. பரந்தன் பங்கேற்றார். (ச-25,9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்
21.03.1944

மறைவு
14.02.2025

கடந்த 14.02.2025 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர்
# அல்லிக்குட்டி சின்னத்துரை

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் (15.03.2025) சனிக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 16.03.2025 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**சிறுப்பிட்டி வடக்கு,**
**நீர்வேலி.**

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர் நிறுத்தம் செய்யாவிடில் ரஷ்யாவுக்கு அழிவு ஏற்படும்!

## ட்ரம்ப் மிரட்டல்

**வொஷிங்டன், மார்ச் 14**

**உக்ரைனுடன் போர் நிறுத்தம் செய்வதற்கு ரஷ்யா முன்வராவிட்டால், பெரும் பொருளாதாரச் சீரழிவை ஏற்படுத்துவோம் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.**

அமெரிக்காவின் முயற்சியைத் தொடர்ந்து, ரஷ்யாவுடன் அமைதி உடன்படிக்கையில் கையொப்பமிடத் தயார் என்று உக்ரைன் அறிவித்துள்ளது. ஆனால், ரஷ்யா இன்னும் தன் நிலைப்பாட்டைத் தெரிவிக்கவில்லை. இதையடுத்தே, 'போர் நிறுத்தம் செய்யாவிட்டால் ரஷ்யாவுக்குப் பெரும் பொருளாதாரச்சீரழிவை ஏற்படுத்துவேன்' என்று ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

அமைதிப்'பேச்சுவார்த்தை தொடர்பில் அடுத்தகட்ட நடவடிக்கைக்காக அமெரிக்கப் பிரதிநிதிகள் விரைவில் ரஷ்யாவுக்குச் செல்லவுள்ளனர். ரஷ்யா போர் நிறுத்தத்தை ஏற்படுத்தும் என்று நான் நம்புகின்றேன். இல்லையேல் ரஷ்யாவுக்குப் பெரும் பொருளாதாரச் சீரழிவை ஏற்படுத்துவோம் என்றும் அதிபர் ட்ரம்ப் கூறியுள்ளார்.

ரஷ்யாவுக்கு மோசமான அழிவுகளை ஏற்படுத்த என்னால் முடியும். அது ரஷ்யாவுக்கும் தெரியும். ஆனால், நான் அவ்வாறான நடவடிக்கைகளைச் செய்வதற்கு விரும்பவில்லை. அமைதியே எனக்குத் தேவை. அதற்கான முயற்சிகளை தொடர்ந்தும் முன்னெடுப்பேன் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## ட்ரம்பின் வரிவிதிப்புகளால் அமெரிக்காவுக்கே ஆபத்து

### குட்டரஸ் சுட்டிக்காட்டு

வொஷிங்டன், மார்ச் 14

உலக நாடுகள் மீது விதிக்கும் அளவுக்கு அதிகமான வரிகள் காரணமாக, ஒரு கட்டத்தில் அமெரிக்காவே பாதிக்கப்படும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலர் குட்டரஸ் எச்சரித்துள்ளார்.

அமெரிக்க அதிபராக பொறுப்பேற்ற நாள்முதல் உலக நாடுகளுக்கு எதிராக ட்ரம்ப் தொடர்ச்சியாக வரிகளை விதித்து வருகின்றார். அவரின் வரி விதிப்புகளால் உலகளவில் வர்த்தகத் தளம்பல்நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான பின்னணியிலேயே, அளவுகடந்த வரி விதிப்பால் ஒரு கட்டத்தில் அமெரிக்கா பாதிக்கப்படும் என்று குட்டரஸ் சுட்டிக்காட்டியுள் ளார்.

நாங்கள் உலகளாவிய பொருளாதாரத்தில் வாழ்ந்து வருகிறோம். இன்று ஒவ்வொரு நாடும் இன்னொரு நாட்டுடன் தொடர்பைக் கொண்டிருக்கின்றன. ஒன்றையொன்று சார்ந்திராமல் இன்று எந்த நாடும் இல்லை. இவ்வாறிருக்கையில், அளவுக்கு அதிகமான வரிவிதிப்புகள் பெரும் ஆபத்தில்தான் போய் முடியும் என்றும் குட்டரஸ் தெரிவித்துள்ளார்.

வரி இல்லாத வர்த்தகம்தான் இந்த நூற்றாண்டுக்கு உகந்ததாக இருக்கும். இதன்மூலம், அனைத்து நாடுகளும் பயனடைய முடியும். வரிகளை சுமத்தி வர்த்தகப் போரில் ஈடுபட்டால், அனைத்தையும் இழக்க நேரிடும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலர் குட்டரஸ் மேலும் கூறியுள்ளார். (ம)

### பதிலடி!

அமெரிக்காவின் வரி விதிப்புக்குப் பதிலடியாக, ஐரோப்பிய ஒன்றியமும் அமெரிக்கப் பொருள்களுக்கு வரிகளைவிதிக்கவுள்ள தாக அறிவித்துள்ளது. (ம)

**மணமகள் தேவை**

சுயதொழில் செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை 1991 இல் பிறந்த மணமகனுக்கு மணமகள் தேவை.
(7 இல் சூரியன்.செவ்வாய்)

1987இல் பிறந்த மணமகனுக்கு மணமகள் தேவை.(12 இல் செவ்வாய்)

(cs 2722) (s)

076 583 0277

## மரண அறிவித்தல்

மண்ணில் 12 . 04 . 1960



விண்ணில் 13 . 03 . 2025

**செல்வி சந்திரவதனா பூவிலிங்கம்**

**(முகாமைத்துவ உதவியாளர் யா/பனை அபிவிருத்திச் சபை)**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சந்திரவதனா பூவிலிங்கம் நேற்று (13.03.2025) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பூவிலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர். யா/பரியோவான் கல்லூரி) பூ மரியமுத்து (இளைப்பாறிய அதிபர் யா/ஆனைப்பந்தி அமெரிக்கன் மிஷன் த.க.பாடசாலை) தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னையா இலட்சிமி, ஜனவாரீஸ் எஸ்வேநிக்கம் தம்பதிகளின் பாசமுள்ள பேர்த்தியும் ற.வனஜா (பிரான்ஸ்) காலஞ்சென்றவர்களான பூ.வனிதா (ஆசிரியர் யா/இணுவில் மத்திய கல்லூரி) பூ.வளர்மதி மற்றும் பூ.ஜெயவதனி (விஜி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் க.றஜந்தன் (மின் பொறியலாளர் பிரான்ஸ்) அன்பு மைத்துனியும் ற.வைதிகா (மருத்துவர் பிரான்ஸ்). ற.றொசேன்ராஜ் (பொறியியலாளர் பிரான்ஸ்) ஆகியோரின் பெரியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (14.03.2025) வெள்ளிக்கிழமை மதியம் 2.00 மணிக்கு இருபாலை சபையில் இடம்பெற்று நல்லடக்க ஆராதனை புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல: 85 தேவாலய வீதி
யாழ்ப்பாணம்

தகவல்:
பூ. ஜெயவதனி (விஜி) சகோதரி
076 642 3541

(CS 2720)V-1

### கைச்சாத்து!

பிரதமர் மோடி நேற்றுமுன்தினம் மொரீஷியஸ்க்குப் பயணம் மேற்கொண்டிருந்த நிலையில், இந்தியாவுக்கும் மொரீஷியஸ்க்கும் இடையில் 8 ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகியுள்ளன. (ம)

### மிரட்டல்!

செங்கடல் வழியாகவும், சர்வதேச கடற்பரப்பிலும் பயணிக்கும் இஸ்ரேலிய கப்பல்களையும், இஸ்ரேலுடன் வர்த்தகம் செய்யும் நாடுகளின் கப்பல்களையும் மீண்டும் தாக்கவுள்ளதாக ஹவுத்தி அறிவித்துள்ளது. (ம)

## மோடியின் அரசாங்கமே இந்தியாவின் பலவீனம்!

### அகிலேஷ் யாதவ் விமர்சனம்

பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசாங்கம்தான் இந்தியாவின் பலவீனம் என்று இண்டியா கூட்டணியின் முக்கியஸ்தரும், சமஜ்வாதி கட்சியின் தலைவருமான அகிலேஷ் யாதவ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அகிலேஷ் யாதவ் மேலும் தெரிவித்ததாவது: சமூகத்தில் வெறுப்புணர்வுகளைப் பரப்பியே இந்திய அரசாங்கம் இன்று ஆட்சியைத் தக்கவைத்துள்ளது. ஆட்சியைக் கைப்பற்றுவதற்காகவும், தமது இருப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் சமூகத்தில் வெறுப்புணர்வை விதைப்பதையே பிரதான திட்டமாக மோடியும் அவரின் சகாக்களும் கொண்டிருக்கின்றனர்.

இப்போது அவர்கள் முஸ்லிம் சமூகத்தினர் மீது வெறுப்பைப் பரப்புகிறார்கள். இதை நான் அனைத்து மக்களுக்கும் வெளிப்படையாகச் சொல்ல விரும்புகிறேன். எதிர்காலத்தில், பிற இனங்களின் மீதும், பிற சமூகங்கள் மீதும் வெறுப்பைப் பரப்புவார்கள். ஆதலால், மக்கள் இந்தக் கயவர்களின் சூழ்ச்சிகளுக்குள் சிக்கக்கூடாது. அனைத்து மதமும் ஒன்றைத்தான் சொல்கின்றன. ஆதலால், பா.ஜ.க.வினர் பரப்புகின்ற வெற்றுக் கோசங்களால் மக்கள் எடுபடக்கூடாது என்று அகிலேஷ் யாதவ் மேலும் கூறியுள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச நிர்வாகக் கட்டமைப்பை டிஜிற்றல் மயப்படுத்தினாலேயே மீட்சி

## அஜித் பி.பெரேரா எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 14

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளவேண்டுமாயின், அரச நிர்வாக கட்டமைப்பு டிஜிற்றல் மயப்படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் வெளிநாட்டு முதலீடுகளை அதிக ளவில் பெற்றுக்கொள்ள முடியும். கிடப்பில் போடப்பட்டுள்ள சைபர் பாதுகாப்பு சட்டவ ரைபை அரசாங்கம் உடனடியாகச் சட்டமாக்க வேண்டும். இதற்கு முழுமையான ஒத்து ழைப்பு வழங்குவோம். இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு மற்றும் டிஜிட் டல் பொருளாதார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

அரச நிர்வாக கட்டமைப்பை டிஜிட்டல் மயப்படுத்துவதற்கு கடந்த அரசாங்கங்கள் ஏதும் செய்யவில்லை என்று குறிப் பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆட்சியில் இருந்த அனைத்து அரசாங்கங்களும் அப்போதைய தகவல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்துக்கு அமைய பல திட்டங்களை செயற்படுத்தியுள்ளன.

2015ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங் கத்தால் பொருளாதாரத்துடன் இயைவானதாக டிஜிட்டல் முறைமையை செயற்படுத்துவதற்கு தரவு பாது காப்பு மற்றும் சைபர் பாதுகாப்பு தொடர்பான சட்டவரைபுகள் தயாரிக்கப்பட்டு, அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டது. 2019ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர் இவ்விரு சட்டவரைபுகளையும் வர்த்தமானியில் பிரசுரித்து சட்டமாக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வில்லை. சைபர் பாதுகாப்பு சட்டவரைபை சட்டமாக்குமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்துகிறேன்.

நாட்டில் பெரும்பாலான செல்வந்தர்கள் முறையாக வரி செலுத்துவதில்லை. செலுத்துபவர்களும் குறைந்தள விலான வரியையே செலுத்துகின்றனர். வரி வலைய மைப்பை விரிவுபடுத்த வேண்டும். விண்ணப்பப்படிவத்தை பூரணப் படுத்தி வரி செலுத்தும் முறைமைக்கு அப்பாற் பட்டு தன்னியக்க முறைமையில் டிஜிட்டல் வசதிகளுடன் வரி செலுத்தும் வசதிகளை செயற்படுத்த வேண்டும்.

நாட்டின் நீதிமன்ற கட்டமைப்பு கவலைக்குரியதாக உள் ளது. நீதிமன்ற நடவடிக்கைகள் மற்றும் பணிகள் டிஜிட்டல் மயப்படுத்தப்படாத காரணத்தால் பல வழக்குகள் இன்றும் நிலுவையில் உள்ளன. நீதிமன்ற கட்டமைப்பை டிஜிட்டல் மயப் படுத்த முறையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்என்றார். (ஏ-இ)

மஹரகமவில்

# கதிர்வீச்சு இயந்திரம் பழுது புற்றுநோயாளர்கள் அவதி

கொழும்பு, மார்ச் 14

மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் உள்ள சுமார் 250 நோயாளர்களின் கதிர்வீச்சு சிகிச்சை நிறுத்தப்பட்டுள்ளது என்று சங்கத்தின் தலைவர் சானக தர்மவிக்ரம தெரிவித்துள்ளார்.

கதிர்வீச்சு சிகிச்சை வழங்கப் பயன்படுத்தப்படும் ஐந்து இயந்திரங்களில் மூன்று இயந்திரங்கள் பழு தடைந்ததன் காரணமாகவே கதிர்வீச்சு சிகிச்சை நிறுத்தப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினையை தீர்க்க அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டு மெனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

# போராட்டத்தில் குதிக்கும் கிராம அலுவலர்கள்

கொழும்பு, மார்ச் 14

பெண் கிராம அலுவலர்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்த வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக இலங்கை கிராம அலுவலர்கள் சங்கம் தெரிவித்துள் ளது. கிராம அலுவலர்களின் 100க்கு 60 வீதத்துக்கு மேலானவர்கள் பெண்களாகக் காணப்படுகின்றனர்.

அதில் அதிக பெண் கிராம அலுவலர்கள் காரியால யங்கள் மக்கள் நடமாற்றம் இல்லாத பிரதேசங்களில் அமைந்துள்ளன.

இதனால் சேவை செய்யும் பெண் அலுவலர்கள் பல் வேறு சந்தர்ப்பங்களில் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடுகின்றனர்.

எனவே பெண் கிரா அலுவலர்களின் பாதுகாப்பு குறித்து முறையான நடவடிக்கை ஒன்றை முன்னெ டுக்க வேண்டும் என்று அந்தச் சங்கத்தின் தலைவர் நெவில் விஜய் ரத்ன தெரிவித்தார். (ச-சீ)

# வருடாந்தப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 14

குப்பிழான் விவசாயிகள் சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு குப்பிழான் விவசாயிகள் சம்மேளன மண்டபத் தில் உடுவில் கமநலசேவை உத்தியோகத்தர் தலைமை யில் நடைபெறவுள்ளது.

பொதுக்கூட்டத்தில் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெறும். அதனைத் தொடர்ந்து 2025 ஆம் ஆண்டுக்கான விவ சாய அங்கத்தவர் பதிவு இடம்பெறும். ஒவ்வொருவருக் கும் அங்கத்துவப் படிவம் வழங்கப்பட்டு அந்த விண்ணப் பப் படிவங்களைப் பூர்த்திசெய்து தரும் ஒழுங்கில் அவர் களுக்கான அங்கத்துவ இலக்கம் வழங்கப்படும்.

குறித்த பொதுக்கூட்டத்தில் சம்மேளனப் பதிவில் உள்ள சகல விவசாயிகளும் கலந்துகொண்டு தங்களின் விவ சாயப் பதிவினை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு குப்பி ழான் விவசாய சம்மேளனத்தினர் வேண்டுகோள் விடுத் துள்ளனர். (ச-66)

# சுமந்திரனின் கனவு பலிக்காது

## விக்னேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 14

இலங்கைத் தமிழரசுக் கட்சி 17 உள்ளூராட்சி மன்றங்க ளையும் கைப்பற்றும் என சுமந்திரன் கூறுவது பகல் கனவு போன்றது என்று சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழில் 17 உள்ளூராட்சி மன்றங்களிலும் இலங்கைத் தமிழரசு க்கட்சி ஆட்சியமைக்கும் என சுமந்திரன் கூறி யுள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி பழம்பெரும் கட்சி. அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால் அங்கே யார் யார் போட்டியிடுகின்றார்கள் என்பதுதான் கேள்விக்குறி- என்றார். (ச-125)

# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 14

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட் டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வாக இசைக்கலாமணி நடேச செல்வச் சந்திரன் குழுவினரின் இன்னிசை நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 10.45 மணி முதல் 11.45 மணிவரை சந்நிதியான் ஆச்சிரம மண் டபத்தில் நடைபெறவுள்ளது. (ச-41-66)


# ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்தார் நந்தசேன

கொழும்பு, மார்ச் 14

மாத்தறை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைப் பாளர் நந்தசேன செல்லஹேவா எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு தனது ஆதரவை தெரிவித்து ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துகொண்டுள்ளார்.

இவர் மாத்தறை நகரசபையின் முன்னாள் பிரதி மேயராகவும் பதவிவகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)





வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் ஏழாலை உப பணிமனையின் ஏற்பாட்டில் பொதுமக்களுக்கான நடமாடும் சேவை நேற்று வியாழக்கிழமை ஏழாலை மயிலங் காடு முருகன் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது. (ச66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர்...

நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
பட்டலந்த விவகாரம் தொடர்பில் இப்போது மிகப்பெரியளவில் பேச்சுகள் அடிபடுகின்றன. அந்தக் காலத்திலும் இந்த விடயங்கள் பேசப்பட்டவைதான். முன்னாள் ஜனாதிபதி ரணிலுக்கும், பட்டலந்த புதைகுழிக்கும் தொடர்புள்ளது என்றும் தகவல்கள் வெளியாகியிருந்தன. அந்த ஆணைக்குழு அறிக்கை கூட இவ்வாறான விடயங்களை உள்ளடக்கியதாகவே வெளிவந்தது.
காலம் கடந்திருந்தாலும், இந்த விடயங்களை வெளிக்கொண்டுவந்து உண்மையைப் பகிரங்கப்படுத்த அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகளை சரி என்றே நான் கருதுகின்றேன். அதில் எந்தப் பிரச்சினையும் எமக்கில்லை. ஆனால், இந்தப் பட்டலந்த விவகாரம் போன்று தமிழர் பகுதிகளில் எத்தனை ஆயிரம் விடயங்கள் நடந்திருக்கின்றன. அவையெல்லாம் உங்களின் கண்களில் படவில்லையா?
தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளுக்கும், துன்பங்களுக்கும் எதிராக தற்போதைய அரசாங்கமும் எந்த நடவடிக்கையும் எடுக்காது என்பதே உண்மை. தமிழர்களின் விடயத்தில் ஆட்சி எவ்வாறுதான் மாறினாலும் காட்சிகள் மாறப்போவதில்லை - என்றார். (அ-ம-26)

## திணைக்களத்தின்...

னரும் பெருமளவில் தடைகளை ஏற்படுத்தி வருகின்றனர். அரச அதிகாரிகளே அரசின் கொள்கைக்கு எதிராகச் செயற்படும்போது, எவ்வாறு நெல்லுற்பத்தியில் தன்னிறைவு காணமுடியும்? என்று கேள்வி எழுப்பியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் குகதாசன் நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் உரையாற்றியதாவது,
அரசால் முன்வைக்கப்பட்டுள்ள பாதீட்டில் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சுக்கு மீண்டெழும் செலவுக்காக 83.9 பில்லியன் ரூபாவும் மூலதன செலவுக்காக 133 பில்லியன் ரூபாவும் மொத்தமாக 216.9 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டைவிட 62 பில்லியன் ரூபா அதிகமாகும். இது வரவேற்கத்தக்கது.
எனினும் விவசாய மற்றும் கால்நடை துறைக்கான ஒதுக்கீடானது கடந்த ஆண்டைவிட 2.6 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளதோடு இதன் அபிவிருத்திக்கான ஒதுக்கீடு 5.76 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஊடான அபிவிருத்திக்கான ஒதுக்கீடானது கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு 22.4 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. இந்தக் குறைப்புகள் நாட்டின் அரிசி உற்பத்தியில் தன்னிறைவு காணவேண்டும் என்ற அரசின் நோக்கத்திற்கு ஏற்புடையதல்ல.
அண்மைக்காலத்தில் இலங்கையில் அரிசித் தட்டுப்பாடு பெரும் பிரச்சினையாகக் காணப்படுகின்றது. ஒரு காலத்தில் அரிசியை ஏற்றுமதிசெய்த நாடு, இன்று இறக்குமதி செய்யவேண்டிய நிலை ஏன் ஏற்பட்டது என்பதற்கான மூல காரணத்தைக் கண்டறிந்து, அதைத் தீர்க்க அரசு முனையவேண்டும்.
அரிசி உற்பத்திக் குறைவுக்கு வெள்ளம், வறட்சி உள்ளிட்ட இயற்கைப் பேரிடர்கள் காரணங்களாக இருந்தாலும், திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் போர்க் காலத்திலே கைவிடப்பட்ட 205 சிறுகுளங்களும் 25 அணைக்கட்டுகளும் மீண்டும் நெற்செய்கைக்கு கொண்டுவரப்படாமல் இருப்பதே முதன்மையான காரணியாகும். இவற்றை மீண்டும் நெற் செய்கைக்குக் கொண்டு வருவதன் மூலம் ஏறத்தாழ 12 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் செய்கைபண்ண முடியும்.
இவ்வாறு நெல் உற்பத்தியை அதிகரிக்கத் தடையாக இருப்பவர்களில் முதன்மையானவர்கள் வனத்துறை அதிகாரிகளும், வனஉயிரிகள்திணைக்களத்தினரும்தான். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் இவர்கள் வேறு ஒரு நாட்டை கைப்பற்றுவதைப்போல விவசாயிகளது நிலங்களைக் கைபற்றி விவசாயம் செய்ய விடாமல் தடுத்துவருகின்றனர். இந்த விடயத்தில் அமைச்சர் கூடுதலான கவனம் செலுத்தவேண்டும்-என்றார். (அ-ம-இ)

## இராணுவத்தின்...

மட்டக்களப்பு விமானநிலையத்தில் உள்ள வீதியொன்று தொடர்பாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. அந்த வீதி விமான நிலையத்துக்கு நடுவே செல்வதால் அதைத் திறக்கமுடியாதுள்ளது. இவ்வாறு துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர் ஜனித் ருவன் கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.
1985ஆம் ஆண்டு மட்டக்களப்பு விமான நிலையம் பாதுகாப்பைக் காரணம்காட்டி திடீரென விஸ்தரிக்கப்பட்டதால் வலையிறவு, புதுவூர், சேற்றுக்குடா, திமிலைதீவு மற்றும் திருப்பெருந்துறை போன்ற ஐந்து கிராமங்களைச் சேர்ந்தவர்களின் வீடுகள், வீட்டுக் காணிகள், வயல்கள், வாணிப நிலையங்கள், பாதைகள் மற்றும் பாடசாலைகள் என்று கணிசமான பகுதிகள் அரசால் சுவீகரிக்கப்பட்டன.
அவற்றுக்குப் பதிலாக வழங்கப்பட்ட காணிகளுக்கான உறுதிபத்திரங்கள் வழங்கப்படாமை, குத்தகை கோருகின்றமை, வீதி மூடப்பட்டுள்ளமை என்பன தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றில் சுட்டிக்காட்டினார். அதற்குப் பதிலளித்தபோதே பிரதியமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
1990ஆம் ஆண்டு பாதுகாப்புக் காரணங்களுக்காக பலாலிஅச்சுவேலி வீதி மூடப்பட்டது. போர் முடிவடைந்து 15 வருடங்கள் கடந்துள்ளபோதும் 2024ஆம் ஆண்டுவரை அந்த வீதியைத் திறக்க முடியாது போயிருந்தது. ஆனால் நாங்கள் வந்து சிறிது காலத்துக்குள்ளேயே அந்தவீதி திறக்கப்பட்டது. அந்த வீதி மட்டுமல்ல, கடந்தகாலங்களில் பாதுகாப்புக் காரணங்களுக்காக மூடப்பட்ட பல வீதிகளைத் திறக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.
மட்டக்களப்பு விமான நிலையத்துக்கு நடுவே செல்லும் வீதியைத் திறக்கமுடியாது. ஆனால் தெற்கு வேலியோர வீதியைத் திறப்பதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம். காணி விடயத்தில் மண்முனை வடக்குப் பிரதேச செயலகத்தின் பதிலைப் பெற்றுள்ளோம். 40 வருடங்கள் ஆகியுள்ளதால், காணிகளின் சரியான உரிமையாளர்களை அடையாளம்காண முடியாதுள்ளது. முறையாக ஆராயாமல் உரித்துகளை வழங்குவதற்கு சட்டப்படி அதிகாரம் கிடையாது.
மக்கள் தமது பிறதேசத்தில் வாழும் உரிமையை உறுதிசெய்வது அரசாங்கத்தின் பொறுப்பாகும். மக்களின் ஆணையைப் புரிந்துகொண்டு அதுதொடர்பில் செயற்படுவோம்-என்றார். (அ-எ-இ)

## முன்னாள்...

குறித்த நபர் தனது வீட்டுவாசலில் நின்றுகொண்டிருக்கையில், மோட்டார்சைக்கிளில் வந்த இருவரே துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு தப்பிச்சென்றுள்ளனர் என்று முதற்கட்ட விசாரணையின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. (அ-ம-44)

## திஸ்ஸ..

விகாரை உடனடியாக அகற்றப்பட வேண்டும் என்றும், பொதுமக்களின் காணிகளை அவர்களிடமே ஒப்படைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் நேற்றும் தொடர்ந்தது.
இது தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்ததாவது:-
தையிட்டி திஸ்ஸ விகாரை என்பது ஒரு சட்டவிரோதக் கட்டுமானம். இது யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே, எமது மண்ணில் அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையை இடித்து அகற்றிவிட்டு அந்தக் காணியை எம்மிடம் ஒப்படைக்க வேண்டும். எமது காணிகளைத்தான் நாங்கள் கோருகின்றோமே தவிர, வேறெந்த மாற்றுத்திட்டங்களையும் கோரவில்லை - என்றனர்.
பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, விகாரை வழிபாட்டுக்கு இடையூறு செய்யக்கூடாது என்ற நீதிமன்றக் கட்டளையை வாசிக்கச் சென்ற பொலிஸாருடன் பொதுமக்கள் வாக்குவாதத்திலும் ஈடுபட்டனர்.
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொன். ஐங்கரநேசன், அரசியற் பிரதிநிதிகள், சட்டத்தரணிகள், பொதுமக்கள் எனப் பலரும் போராட்டத்தில் கலந்துகொண்டனர். (அ-ம-125-26-27-66-20)

## பயங்கரவாதத்...

நிபுணர்களை உள்ளடக்கிய குழு நியமிக்கப்படும். குழுவின் அறிக்கைக்கு அமைவாக பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பான சட்டமூலம் வெகுவிரைவில் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர், சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-
1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க (தற்காலிகம்) பயங்கரவாதத் தடைச்சட்டம் அப்போதைய நிலைமைக்கு முகங்கொடுக்கும் வகையில் கொண்டுவரப்பட்டது. இந்தச் சட்டம் பல்வேறு திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டு 46 ஆண்டுகாலமாக இலங்கையில் அமுல்படுத்தப்பட்டுள்ளது.
சட்டமூலத்தை மேலும் பரிசீலனை செய்து பரிந்துரைகளை முன்வைக்கும் பொருட்டு நீதியமைச்சின் செயலாளர் தலைமையில் குழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை பத்திரம் ஒன்றை சமர்ப்பித்துள்ளேன். குழுவின் பரிந்துரைகள் கிடைத்தவுடன், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இரத்துச்செய்வது தொடர்பிலும் அல்லது மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பிலும் தீர்மானிக்கப்படும்.
இதற்கு முன்னர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைது செய்யப்படும் சந்தேகநபரை வேண்டிய காலம்வரை தடுத்து வைப்பதற்கான இயலுமை காணப்பட்டது. இதனால் ஏற்படும் மனித உரிமை மீறல்கள் 2022ஆம் ஆண்டு 22ஆம் இலக்க விசேட ஏற்பாடுகள் திருத்தத்தின் மூலம் தடுக்கப்பட்டுள்ளன.
துறைசார் குழு முன்வைக்கும் பரிந்துரைகளை மீளாய்வு செய்து, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை பரிசீலனை செய்து, அதற்குப் பதிலாக புதிய சட்டமூலத்தை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார். (அ-ம-இ)

## கச்சதீவு...

ஆரம்பமாகவுள்ளது.
திருவிழாத் திருப்பலி நாளை காலை 9 மணியளவில் ஒப்புக்கொடுக்கப்படும் என்று யாழ்ப்பாண மறைமாவட்ட குருமுதல்வர் ஜெபரட்ணம் அடிகளார் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் யாழ். மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் தெரிவித்ததாவது:-
கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழா நாளையும், நாளைமறுதினமும் (இன்றும் நாளையும்) இடம்பெறவுள்ளது. இரண்டு நாடுகளையும் சேர்த்து சுமார் 8 ஆயிரம் பக்தர்கள் இம்முறை திருவிழாவில் கலந்துகொள்ளவுள்ளனர். சிவகங்கை மறைமாவட்ட ஆயருடன் இணைந்து 100 குருக்களும் இந்தத் திருவிழாவில் கலந்து கொள்ளவுள்ளனர். அனைத்து ஏற்பாடுகளும் முழுமைப்படுத்தப்பட்டுள்ளன. குடிதண்ணீர், உணவு, மலசலகூடம் உள்ளிட்ட அனைத்து ஏற்பாடுகளும் முழுமைப்படுத்தப்பட்டுள்ளன.
நாளை (இன்று) மாலை மாலை 4 மணியளவில் கொடியேற்றம் இடம்பெறும். அதைத் தொடர்ந்து, திருச்சிலுவைப் பாதை, திருப்பலி, நற்கருணை என்பன இடம்பெறும் நாளைமறுதினம் (நாளை) காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலி ஆயர் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும்.
தென்பகுதி சகோதரர்களும் வரவுள்ளனர். ஆதலால், சிங்கள மொழியிலும் வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. சிங்கள மொழியில் மறையுரை ஆற்றுவதற்காக கொழும்பு மறைமாவட்டத்தில் இருந்து அருட்தந்தை சிஸ்வாண்டி குருஸ் அடிகளார் கலந்து கொள்ளவுள்ளார். மக்கள் சமைத்து உண்பதற்கு அங்கு அனுமதியில்லை. தீபற்றவைக்க முடியாது. சமைத்த உணவுகள் வழங்கப்படும் - என்றார். (அ-ம-125)

## முன்னணி...

தேசிய மக்கள் முன்னணி, வடமாகாண முன்னாள் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையிலான தமிழ்த் தேசிய பசுமை இயக்கம், ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா அணி, மூத்த சட்டத்தரணி ஸ்ரீகாந்தா தலைமையிலான தமிழ்த் தேசியக் கட்சி, அருந்தவபாலன் அணி ஆகிய தரப்புகளே இந்தக் கூட்டணியை அமைத்துள்ளன. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கச்சதீவு வரும்...

என்று சிவகங்கை மறைமாவட்ட ஆயர் லூர்து ஆனந்தம் ஆண்டகை தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய அரசின் கட்டுப்பாடுகளாலேயே 4 ஆயிரம் பக்தர்கள் கச்சதீவுக்கு வருகின்றனர். கட்டுப்பாடுகள் நீக்கப்படும் பட்சத்தில் கச்சதீவுக்கு வருவோரின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருக்கும்.
கச்சதீவு இரண்டு நாடுகளினதும் உரையாடல் தளமாக இருந்துவந்துள்ளது. கச்சதீவு அந்தோனியார் திருவிழா இலங்கை, இந்திய உறவுகளுக்கு இடையிலான சகோதரத்துவத்தின் அடையாளமாகவும் காணப்படுகின்றது. இரண்டு நாடுகளும் தொடர்ந்து இவ்வாறான அமைதியான சூழலை எதிர்கொள்ளவேண்டும். கச்சத்தீவு திருவிழாவின் வழியாக இரண்டு நாடுகளுக்கும் இடையிலான சகோதரத்தும் மேம்படவேண்டும் - என்றார். (அ-ம-125)

**தேவை**

அச்சுவேலியில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றிற்கு சமையலாளர் தேவை,தங்கி நிற்கும் வேலையாட்கள் விரும்பத்தக்கது. (cs 2721) (6)

077 777 5068

**தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு**

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். விலை பேசித் தீர்மானிக்கப்படும். (CS/57653) J-1

தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526

**படவரைஞர் தேவை (2D & 3D)**

Auto CAD மற்றும் Revit தெரிந்த கட்டட நிர்மான வரைபடங்கள் தயாரிப்பதில் சிறந்த அனுபவம் உடையவர் அவசரமாக தேவை.

சம்பளம் 60000 - 75000 + Allowance

தொடர்புகளுக்கு

JAFFNA ARCHITECT & ENGINEERS

+94 711 100 066, 077 213 7266

(CS/2717) J-1

## பதவி...

தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
பொதுமக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்றவில்லை. ஆதலால், அரசாங்கம் உடனடியாகப் பதவி விலக வேண்டும். நாட்டு மக்கள் ஓரணியில் திரண்டு அரசாங்கத்தை விரட்டுவதற்கு முன்னர், அவர்கள் தாங்களாகவே பதவிகளில் இருந்து விலகுவதே பொருத்தமானது.
அரசாங்கம் ஆட்சியை பொதுஜன பெரமுனவிடம் ஒப்படைக்க வேண்டும். எமது அணியிலேயே அனுபவம் உள்ளவர்கள் உள்ளனர்.
பட்டலந்த வதை முகாம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும். சட்டத்தை அமுலாக்குவதென்பது அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையாக அமையக்கூடாது - என்றார். (அ-ம-44)

## இலங்கைக்கு...


புரோஸ்மைட் ஊசி மருந்துகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, சுகாதார அமைச்சில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் வைத்து இந்த உதவித் திட்டங்களை ஒப்படைத்தார்.
இது தொடர்பில் சந்தோஷ் ஜா தெரிவித்ததாவது:
அயல் நாட்டுக்கு முன்னுரிமை என்பதே எமது வெளிவிவகாரக் கொள்கை. இதன்படி, சுகாதாரத்துறை உட்பட பல்வேறு துறைகளில் நெருக்கடிகள் ஏற்பட்ட காலங்களில் இந்தியா இலங்கைக்கு நம்பகமான நண்பராகவும் முதலில் பதிலளிப்பவராகவும் இருந்து வருகிறது. கொவிட் பெருந்தொற்றுக் காலத்திலும், இலங்கைக்கு நாங்கள் உடன் உதவிகளை வழங்கினோம். இனிவரும் காலங்களிலும் எமது உதவித் திட்டங்கள் தொடரும் - என்றார். (அ-ம-இ)

## மாகாணசபை...

வழமைக்கு மாறான இந்த நடவடிக்கை மூலம் மாகாணசபை முறைமையை இந்த அரசாங்கம் எவ்வளவு தூரம் உதாசீனம் செய்கின்றது என்பதைப் புரிந்துகொள்ள முடியும் என்று வடமாகாண அவைத் தலைவரும், தமிழரசுக் கட்சியின் பதில் தலைவருமான சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.
நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கடந்த அரசாங்கங்கள் மாகாண ஆளுநர்களை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் இணைத் தலைவர்களாக நியமித்தன. ஏனெனில், மாகாணத்துக்கும் மத்திக்கும் இடையிலான இணைப்பு அதிகாரிகளாக அவர்கள் இருந்ததால் அந்த நியமனங்கள் வழங்கப்பட்டன.
ஆனால், தற்போதைய அரசாங்கமோ அதற்கு மாறாக மாகாண ஆளுநர்களை இணைத்தலைவர்களாக நியமிக்கவில்லை. இது மாகாண சபை விடயத்தில் இந்த அரசாங்கம் எவ்வளவுதூரம் விசுவாசமாக உள்ளது என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது. தமக்கு ஏற்றவர்களையே இந்த அரசாங்கம் ஆளுநர்களாகத் தெரிவுசெய்து நியமித்தது. ஆனால் தங்களின் நியமன அதிகாரிகளையே இணைத் தலைவர்களாக நியமிப்பதற்குத் தயாரில்லை எனும்போது, தமிழ் மக்கள் இதிலிருந்து பல்வேறு விடயங்களைப் புரிந்துகொள்ள வேண்டும் - என்றார். (அ-ம-26)

**31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவில்லும்**

தோற்றம் 11 . 03 . 1944



மறைவு 12 . 02 . 2025

கடந்த 12.02.2025 புதன்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

**அமரர் சுப்பிரமணியம் பரமேஸ்வரன்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (14.03.2025) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனிததீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை மறுதினம் (16.03.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
மேலும் அன்னாரை இழந்து ஆழ்ந்த சோகத்தில் மூழ்கியிருந்த எமக்கு பல வழிகழிலும் ஆறுதல் தந்தவர்களுக்கும், மலர் வளையங்கள் வைத்தும், இறுதிஊர்வலத்தில் கலந்துகொண்டவர்களுக்கும், எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பெரிய மதவடி,
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம். (CS/57727) J-1 குடும்பத்தினர்.

**மரண அறிவித்தல்**



**சிவப்பிரகாசம் பரமேஸ்வரி**

அராலி வீதி, சங்கானையைச் சேர்ந்த சிவப்பிரகாசம் பரமேஸ்வரி நேற்று (13.03.2025) வியாழக்கிழமை இறைபாதம் எய்திவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா-ஆச்சிப்பிள்ளை. தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான கோவிந்தபிள்ளை-நாகம்மா தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற சிவப்பிரகாசம் (ஆயுள்வேத வைத்தியர்) அவர்களின் மனைவியும், சசியின் அன்புத் தாயாரும் செந்தில் அனந்தனின் மாமியாரும், காலஞ்சென்ற மதிபூசணம், மற்றும் புஸ்பாதேவி, திருலோகன் ஆகியோரின் சகோதரியும் பூமணி, காலஞ்சென்ற கதிர்காமத்தம்பி, மீனலோஜினி ஆகியோரின் மைத்துனியும், அருள்ராம், அனுரங்கன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.
அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (14.03.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக சங்கானை இந்து கரைச்சி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கோள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தகவல்:
செ. சசி-மகள் (ஜேர்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.